விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 215 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 06 சனிக்கிழமை (22.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# தமிழர்களின் அபிலாஷைகளை
# இலங்கை நிறைவேற்ற வேண்டும்

## ஜனாதிபதி ரணிலிடம் பாரதப் பிரதமர் மோடி வலியுறுத்து



- தமிழ் மக்கள் கண்ணியமும் மரியாதையும் கொண்டு வாழ்வதை இலங்கை உறுதி செய்ய வேண்டும்.
- வடக்கு - கிழக்கு வளர்ச்சிக்காக இந்தியா 75 கோடி ரூபாய் ஒதுக்கீடு.
- சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்தை இலங்கை உறுதி செய்ய வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடனான சந்திப்பின் பின் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் மக்கள் கண்ணியமும் மரியாதையும் கொண்ட வாழ்க்கையை இலங்கை 15

### இலங்கை - இந்தியா
## ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்து



(புதுடில்லி)

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் சூரிய சக்தி திட்டம் தொடர்பான புரிந்துணர்வு ஒப் பந்தம் உட்பட ஐந்து புரிந் துணர்வு ஒப்பந்தங் கள் இந்தியாவிற்கும் 15

## 13ஆவது திருத்தத்தை அமுலாக்கி மாகாண சபை தேர்தலை நடத்துக
### ஜனாதிபதி ரணிலிடம் பிரதமர் மோடி

(புதுடில்லி)

இலங்கை 13ஆவது திருத் தச் சட்டத்தை அமுலாக்கி மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறு இந்தி யப் பிரதமர் மோடி தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடனான சந்திப்பின் பின் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

இந்தியாவினதும் இலங் கையினதும் பாதுகாப்பு நலன் கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளதால் இந்தி யாவின் அயல்நாடுகளுக்கு முன்னுரிமை கொள் கையில் இலங் 15

## காங்கேசன்துறை - நாகப்பட்டினம் கப்பல் சேவை விரைவில் ஆரம்பம்
### பாரதப் பிரதமர் நரேந்திர மோடி உறுதி

(புதுடில்லி)


காங்கேசன்துறைக்கும் தமிழ்நாட்டின் நாகப்பட்டினத் துக்குமான கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என பிரதமர் மோடி உறுதி யளித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடனான சந்திப்பின் பின் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தமிழ்நாட்டின் நாகப்பட்டி னத்தையும் வட இலங்கையின் காங்கேசன்துறையை யும் இணைக்கும் 02

## அதிகாரப் பகிர்வு தொடர்பில் மோடிக்கு தெரிவித்தேன்
### புதுடில்லியில் ஜனாதிபதி ரணில்



(புதுடில்லி)

இலங்கையில் முன்னெடுக்கப் பட வுள்ள அதிகாரப் பரவலாக்கம், அதி காரப் பகிர்வு குறித்த யோசனை கள், கருத்துக்கள் இந்தியப் பிரத மர் மோடியிடம் பகிரப் பட்டதாக ரணில் விக் 15

## வங்கித்தொழில் சட்டமூலம் நிறைவேற்றம்

(கொழும்பு)

வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் திருத் தங்களுடன் நேற்று பாராளு மன்றத்தில் நிறைவேற்றப் பட்டது.

சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு 15

## துப்பாக்கிச் சூடு குடும்பஸ்தர் மரணம்
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா வடக்கில் துப் பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் மரண மடைந்துள்ளார்.

நேற்று மாலை இச்சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த அழகையா மகேஸ்வரன் (வயது 58) 15

## வவுனியா - மன்னார் வீதியில் மோ.சைக்கிள் விபத்து
### இளைஞன் உயிரிழப்பு



(வவுனியா)

வவுனியா, மன்னார் வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

மன்னார் வீதி, 4ம் கட்டைப் பகுதி யில் நேற்று முன்தினம் நள்ளிரவு இவ் விபத்துச் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த தொல்லியல் பகுதியாக குருந்தூர் பிரகடனப்படுத்தப்படும்

## புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க

(கொழும்பு)

சட்ட ஆலோசனைகளுக்கு அமைய குருந்தூர் மலையை பௌத்த தொல்லியல் பகுதியாக பிரகடனப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளை பாதுகாக்க விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்களின் போது பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர உரையாற்றுகையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குருந்தூர் மலை பகுதியில் பிரிவினைவாதம் மற்றும் அடிப்படைவாத கொள்கையுடைய தமிழ் அரசியல்வாதிகளின் தலைமைத்துவத்தில் கடந்த 14 ஆம் திகதி பொங்கல் பொங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பொலிஸ் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் தலையீட்டினால் அந்த முயற்சி தடுக்கப்பட்டது.

குருந்தூர் மலை 1931 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பௌத்த தொல்லியல் பிரதேசம் என வர்த்தமானி ஊடாக பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆனால் பிற்பட்ட காலங்களில் அப்பகுதியில் பல ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும் குருந்தூர் மலையில் தமிழர்கள் வாழ்ந்ததற்கும் இந்து வழிபாடுகள் இடம்பெற்றதற்கும் எவ்வித சான்றுகளும் கிடைக்கப் பெறவில்லை.

இவ்வாறான பின்னணியில் குருந்தூர் மலை பகுதியில் தமிழ் அடிப்படைவாதிகள் முரண்பாடுகளை தோற்றுவிக்கிறார்கள். இந்த பிரச்சினைக்கு உடன் தீர்வு காண வேண்டும். இல்லையென்றால் தேசிய நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படும்.

பல முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ள நிலையில் குருந்தூர் மலையை பௌத்த தொல்லியல் பகுதி என ஏன் இதுவரை பிரகடனப்படுத்தவில்லை என புத்தசாசனம், மற்றும் மத விவகாரங்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கல் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

சட்ட ஆலோசனைகளை பெற்று இவர் ( ஜயந்த சமரவீர) முன்வைத்த யோசனையை செயற்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என்றார். (ம-7)

# கடற்றொழிலாளர்களின் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு பார்க்குக

## பிரதமர் மோடி வலியுறுத்து

(புதுடில்லி)

இருநாட்டு கடற்றொழிலாளர்களின் பிரச்சினையை மனிதாபிமான கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணிலுடனான சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மற்றும் தமிழக கடற்றொழிலாளர்களின் பிரச்சினை குறித்து இரு தரப்பினரும் விவாதித்ததுடன். குறித்த விவகாரத்தை "மனிதாபிமான கண்ணோட்டத்தில்" பார்க்க வேண்டும்' என்றும் மோடி வலியுறுத்தினார்.

வடக்கு கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் காணப்படுவதாக குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்ட நிலையில் பிரதமர் மோடி இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-7)

# யாழில் ஓடு விற்பனை உரிமையாளர் மீது தாக்குதல்

## பொலிஸில் முறைப்பாடு செய்ய சென்ற நிலையில் மரணம்

யாழில் ஓடு விற்பனை நிலைய உரிமையாளர் ஒருவர் தாக்கப்பட்ட நிலையில் குறித்த நபர் தாக்குதல் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்ற நிலையில் மயங்கி விழுந்து மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாண தபாலகத்துக்கு முன்பாக வர்த்தக நிலையத்தை நடந்தி வரும் கொட்டடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் கநீந்திரன் (வயது- 66) என்பவர் 35 வயது உடைய நபர் ஒருவருக்கு ஓடு விற்பனை செய்துள்ளார். அவர் பணத்தை கொடுக்காத நிலையில் திருப்பிகேட்ட போதும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு ஏழு முப்பது மணியளவில் ஓடு விற்பனை நிலைய உரிமையாளருக்கு ஓடு வாங்கிய 35 வயதுடைய நபர் செருப்பால் அடித்துள்ளார்.

இந் நிலையில் இரவு 8.00 மணியளவில் கடையை பூட்டிவிட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய சென்ற நிலையில் அவர் மயங்கி விழுந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாண பொலிஸார் வர்த்தக நிலைய உரிமையாளரைத் தாக்கிய 35 வயதுடைய இளைஞரை கைது செய்து சிறையில் அடைத்ததோடு அவர் மீது வழக்கும் பதிவு செய்துள்ளனர். (ம-7,60)

# மரண அறிவித்தல்



## குகேந்திர குருக்கள் கஜாணன குருக்கள்

*அம்பாறை மாவட்டம் பெரிய கல்லாறு, கல்லாறைப் பிறப்படமாகவும் இலட்சுமணன் தோட்டம் தும்பளை, பருத்தித்துறையினை வசிப்பிடமாகவும் கொண்ட குகேந்திர குருக்கள் கஜாணன குருக்கள் அவர் கள் 21.07.2023 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார்.*

*அன்னார் குரும்பசிட்டியை பிறப்பிடமாகக் கொண்ட குகேந்திர குருக்கள் - விக்னதேவி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் தங்கச்செல்வி (தாபன பகுதி உத்தியோகத்தர் யாழ். மாநகர சபை ) அவர்களின் அன்புக் கணவரும் சவிஷ்ணு, துஹாரிஷன், திபுஷ்ணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் ஐயர் - காமாட்சி அம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ரேணுயன், விக்னாயினி, விஹோசனா ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் தும்பளை பருத்தித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று 22.07.2023 சனிக்கிழமை காலை 9:30 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக கோரியடி பருத்தித்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

*தகவல்:- குடும்பத்தினர்*
074 056 2391

(C-6949)

# தும்புத்தொழிற்சாலையில் திடீர் தீ விபத்து

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஈரப்பெரிய குளம் தும்புத் தொழிற்சாலையில் திடீர் தீ விபத்து ஏற்பட்டு தொழிற்சாலையின் ஒரு பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று மாலை இடம் பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஈரப்பெரிய குளம் பகுதியில் அமைந்துள்ள தும்புத் தொழிற்சாலையின் ஒரு பகுதியில் திடீரென தீ பரம்பல் ஏற்பட்டதை அவதானித்த அங்கு கடமையில் இருந்தவர்கள் உடனடியாக பொலிஸாருக்கும், வவுனியா மாநகர சபை தீயணைப்பு பிரிவினருக்கும் தகவல் வழங்கினர்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா மாநகரசபை தீயணைப்பு பிரிவினர் இராணுவத் தினரின் துணையுடன் தீயை கட்டுப்படுத்த கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். எனினும் தும்புத்தொழிற்சாலையின் இரு பகுதியில் தீப் பரம்பல் ஏற்பட்டது.(ம-7,250)

# காங்கேசன்துறை...

வகையில் பயணிகள் படகுச் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இரு நாடுகளுக்குமிடையில் விமான சேவைகளையும், கப்பல் சேவைகளையும் மேம்படுத்த உடன்பாடு காணப்படுவதாகவும், அது சுற்றுலா மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்துவதற்கும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையே கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கான பணிகளை முன்னெடுக்க முடியும் என்றார். (ம-7)


# சிவதொண்டர்கள் தேவை

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்திற்கு சிவதொண்டுகள் ஆற்றவும், நன்கு - சமையல் வேலை தெரிந்த, குடிப்பழக்கம் அற்ற ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பங்கள் யாவும்,

**அறங்காவலர், நிர்வாக உறுப்பினர்கள்**
**மகாதேவ ஆச்சிரமம்.**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

என்ற முகவரிக்கு 31.07.2023 இற்கு முன்னர் அனுப்பவும்.

(16348)

# விசா ஆலோசனைகள்

- **ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான அரிய வாய்ப்பு**
- **கனடா** இலகுவில் செல்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும்
- **கொசோவா** நாட்டில் Working visa 15 நாட்களில் பெற்றுத்தரப்படும். (முற்பணம் எதுவும் இல்லை)
  அனுபவம் தேவை இல்லை
- **சர்பியா** நாட்டில் Tailor வேலைவாய்ப்புக்கள் உள்ளன. அனுபவம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

(C-6939)

**Hybrid International Hub Pvt Ltd, Jaffna**

**076 [illegible] 0098, 021 222 1265**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியை நாடு மீண்டும் எதிர்கொள்ளும்

## பேராசிரியர் அமிந்த மெத்சில

(கொழும்பு)

**நாடு மீண்டும் செப்டெம்பர் மாதத்தில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தின் பேராசிரியர் அமிந்த மெத்சில தெரிவித்துள்ளார்.**

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தால் இந்த நிலைமை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாணய நிதியத்தின் 39 வீத பொருளாதார ஒப்பந்தங்கள் மே மாதத்தில் நிறைவேற்றப்பட வேண்டியுள்ள போதிலும் அரசாங்கம் 10 வீதத்தையே நிறைவேற்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நீதிக்கான மக்கள் கூட்டமைப்பு கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் அமிந்த மெத்சில இவ்வாறு தெரிவித்தார். (நி-5)

# அஜித் தோவல்-ரணில் சந்திப்பு



(டில்லி)

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை டில்லியில் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கோதுமை மாவின் விலை உலக சந்தையில் அதிகரிப்பு

(வோஷிங்டன்)

கருங்கடல் வழியாக உக்ரைன் துறைமுகங்களை நெருங்கும் கப்பல்களுக்கு ரஷ்யா எச்சரிக்கை விடுத்ததை அடுத்து உலக சந்தையில் கோதுமை விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

கிரிமியா பாலத்தின் மீதான தாக்குதலை உக்ரைன் தமது ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி நடத்தியதாக ரஷ்ய அரசாங்கம் குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து கருங்கடலில் செயற்பாடுகள் தொடர்பில் சூடான சூழல் உருவானது.

இந்நிலையில், கருங்கடலில் உக்ரைனுக்கு செல்லும் கப்பல்கள், உக்ரைனுக்கு இராணுவ தளபாடங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களாக கருதப்படுவதாக ரஷ்ய அரசு அறிவித்துள்ளது.

கருங்கடலில் உக்ரைன் நோக்கி பயணிக்கும் அனைத்து கப்பல்களையும் இராணுவக் கப்பல்களாக கருதுவோம் என்றும் ரஷ்யா அறிவித்தது.

கருங்கடல் வழியாக தானியக் கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்வதற்கு உத்தரவாதம் அளிக்கும் ஐ.நா ஒப்பந்தத்தில் இருந்து திங்களன்று மொஸ்கோ விலகியதைத் தொடர்ந்து, ரஷ்ய அரசாங்கம் அந்தப் பகுதியில் பயணிக்கும் கப்பல்களை போர் இலக்குகளாகக் கருதுவதாக அறிவித்தது.

ரஷ்யாவின் முடிவால், ஐரோப்பிய பங்குச்சந்தைகளில் கடந்த புதன்கிழமை கோதுமை விலைகள் முந்தைய நாளிலிருந்து 8.2% அதிகரித்து தொன்னுக்கு 25375 யூரோக்களாகவும் சோளத்தின் விலை 5.4% ஆகவும் உயர்ந்தது.

இதற்கிடையில், அமெரிக்கா 8.5% அதிகரித்துள்ளது. (நி-5)

# மொனராகலையில் நிலநடுக்கம்

(கொழும்பு)

இலங்கையில் மொனராகலை பிரதேசத்தில் சிறு அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் நேற்று காலை பதிவாகியுள்ளதாக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 9 மணி 6 நிமிடத்தில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

ரிக்டர் அளவுகோளில் 2.6 மெக்னிடியூட் அளவில் இந்த நில அதிர்வு பதிவானதாக அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது. (நி-5)

## நிதி மோசடி தொடர்பில்

# அவதானமாக இருக்குமாறு மத்திய வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

நிறுவனம் தொடர்பான ஆவணங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நிதி மோசடிகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு இலங்கை மத்திய வங்கி பொது மக்களை வலியுறுத்தியுள்ளது.

வங்கியின் உத்தியோகபூர்வ இலட்சினையை பயன்படுத்தி பல மோசடியான வியாபாரங்கள் நடத்தப்படுவதாக மத்திய வங்கி விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இவ்வாறான எந்தவொரு மோசடி வியாபாரத்திற்கும் வங்கிக்கும் தொடர்பில்லை என்பதை வலியுறுத்தியுள்ளதுடன் குறித்த மோசடி நடவடிக்கைகளுக்கு பலியாக வேண்டாம் என பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி-5)

# கௌதம் அதானியைச் சந்தித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

இந்தியாவின் அதானி குழும உரிமையாளர் கௌதம் அதானியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்துள்ளார்.

இதனை கௌதம் அதானி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த சந்திப்பில், கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய நிர்மாணம், 500 மெகாவாட் காற்றாலை மின் திட்டம் மற்றும் பசுமை வலு சக்தி உற்பத்தியை புதுப்பித்தல், விரிவுபடுத்துதல் உட்பட இலங்கையில் மேற்கொள்ளும் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக கௌதம் அதானி டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (நி-5)

# கல்வி அமைச்சரைச் சந்தித்தார் ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர்



(கொழும்பு)

ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினரும் கல்வி, ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினருமான ரியா ஸ்க்ரோடருக்கும் மற்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும் இடையில் பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

ஜேர்மன் அரசாங்கத்தின் அனுசரணையுடன் செயற்படும் இலங்கை ஜேர்மன் கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் இலங்கை பாடசாலைகளில் ஜேர்மன் மொழி கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டன. (நி-5)

# கொழும்பை வந்தடைந்த ஜப்பான் கப்பல்

(கொழும்பு)


ஜப்பானின் சாமிடரே கப்பல், உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

151 மீற்றர் நீளமுள்ள இந்தக் கப்பலில் 195 பேர் பணியாற்றுகின்றனர்.

குறித்த கப்பல், எதிர்வரும 29ஆம் திகதி, நாட்டிலிருந்து புறப்படவுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் விஷேட தூதுவராக ஷாருக்கான்



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் விஷேட தூதுவராக பிரபல பொலிவூட் நடிகர் ஷாருக்கான் நியமிக்கப்பட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடைபெறவுள்ளது. இதனை, ஒக்டோபர் 9 முதல் நவம்பர் 20 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 1987 போட்டிக்குப் பிறகு, உலகக் கிண்ணப் போட்டிகள் இந்தியாவில் நடைபெறுவது இது நான்காவது தடவையாகும்.

இந்தியா முழுவதும் 10 வெவ்வேறு மைதானங்களில் நடைபெறும் இந்தப் போட்டியின் இறுதிப் போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திரமோடி மைதானத்தில் நடைபெறும். இந்தியா, ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை மற்றும் நெதர்லாந்து ஆகிய 10 அணிகள் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

இந்நிலையில், 2023 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் விஷேட தூதுவராக பிரபல பொலிவூட் நடிகர் ஷாருக்கான் நியமிக்கப்பட்டுள்ளார். (4)

# இருபது ஓவர் போட்டியில் பாண்ட்யா, கில்லுக்கு ஓய்வு

இந்திய கிரிக்கெட் அணி, அடுத்த மாதம் அயர்லாந்தில் சுற்றுப்பயணம் செய்து அந்த அணியுடன் மூன்று 20 ஓவர் போட்டிகளில் விளையாடவுள்ளது.

முதல் 20 ஓவர் போட்டி ஓகஸ்ட் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் அயர்லாந்துக்கு எதிரான தொடரில் ஹர்த்திக் பாண்ட்யா, சுப்மன் கில் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. அதிக பணிச்சுமை காரணமாக ஹர்த்திக் பாண்ட்யாவுக்கு ஓய்வு அளிக்க கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துள்ளது.

மேலும் அவர் ஆசிய கிண்ணம் மற்றும் உலக கிண்ண போட்டிக்கு முழு உடல் தகுதியுடன் இருக்க கிரிக்கெட் வாரியம் விரும்புகிறது. அதே போல் சுப்மன் கில், கடந்த சில மாதங்களாக தொடர்ந்து விளையாடி வருவதால் அவருக்கும் ஓய்வு அளிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக கிரிக்கெட் வாரிய வட்டாரங்கள் தெரிவிக்கையில், "வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டிகளுக்கு பிறகு ஹர்த்திக் பாண்ட்யா எப்படி உணர்கிறார் என்பதை பொறுத்து அணி தேர்வு அமையும்.

உலக கிண்ணத்தில் கப்டன் ரோகித் சர்மாவுக்கு துணை கப்டனாக ஹர்த்திக் இருப்பார் என்பதை மறந்து விடக்கூடாது" என்று தெரிவித்தன. (4)





வடமாகாண விளையாட்டு திணைக்களம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் தீவகம் கலாநிதி விளையாட்டுக் கழகத்தை பாடும்மீன் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது.

(படம்:-ஏனெஸ்ட்)




கபிலா | ஹாலிட் | வாணி










விஜி | மிருஷாலி | கவிந்தன்










நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பெண்களின் பாதுகாப்பை வலுப்படுத்த ஆளுநர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் சிறுவர், பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பாக, மாகாண மகளிர் விவகார அமைச்சு, சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாவட்ட மட்டத்தில் உள்ள அதிகாரிகள், அலுவலர்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் விசேட கலந்துரையாடல் ஒன்றை நேற்று முன்தினம் ஆளுநர் செயலகத்தில் முன்னெடுத்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு, அந்தந்த மாவட்டங்களில் காணப்படும் சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விளக்கமளித்தனர்.

போதைப்பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம், கைத்தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மீதான அதீத நாட்டம், இளவயது திருமணம், சிறுவர் பராமரிப்பின்மை, சிறுவர் இல்லங்களின் குறைபாடுகள், பாடசாலை இடைவிலகல், பெற்றோரின் முறையற்ற திருமணங்கள் முதலிய பல்வேறு பிரச்சினைகள் இதன்போது சம்பந்தப்பட்ட அலுவலர்களால் முன்வைக்கப்பட்டது.

இவற்றை விபரமாகக் கேட்டறிந்த ஆளுநர், மாணவர்கள் மற்றும் இளவயதினரின் பொழுது நல்ல வழிகளில் கழிவதற்கு ஏற்ற வழிவகைகளை மேற்கொள்ள பாடசாலைகளும், பிரதேச மற்றும் கிராமிய மட்ட அமைப்புக்களும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கினார்.

பாடசாலைகளில் இணைப் பாடவிதான செயற்பாடுகளிற்கு தினமும் ஒரு பாடம் ஒதுக்கப்படவேண்டும் என்றும், கிராம மட்டத்தில் விளையாட்டு, கலைச் செயற்பாடுகள் என்பவற்றில் இளையோரை அதிகளவில் ஈடுபடுத்தும் வகையில், பிரதேச செயலகங்களின் துறைசார் அலுவலர்கள், விளையாட்டுக் கழகங்கள், மகளிர் அமைப்புக்கள், கலைக்குழுக்கள் என்பனவற்றையும் இணைத்துச் செயற்பாடுகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பணிப்புரை வழங்கினார்.

பாடசாலை அதிபர்களும் ஏனைய கல்விசார் உத்தியோகத்தர்களும் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்களுடன் தொடர்பில் இருந்து, போதைப்பொருள் பாவனை, உளவியல் சார்ந்த பிரச்சினைகள், பாடசாலை இடைவிலகல் தொடர்பான தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்த வேண்டும் என்றும், இப்பிரச்சினைகள் தொடர்பான தரவுகளை தமக்குக் காலத்துக்குக் காலம் உடனடியாக அனுப்பிவைக்குமாறும் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களிடம் ஆளுநர் கேட்டுக்கொண்டார். (4-5-33)

# குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திருவிழா

(குருநகர்)

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திருவிழா கடந்த 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில் நாளை மறுதினம் 24ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணை பெருவிழாவும் மறுநாள் காலை 6 மணிக்கு யாழ். மறை மாவட்ட ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் திருவிழா திருப்பலியும் நடைபெறும்.

அதனைத்தொடர்ந்து மாலை 4 மணிக்கு திருச்சுருப பவனியும் நடைபெறும். (4-5-106)

## தரப் பரிசோதனையில் தோல்வியடைந்த 63 மருந்துகள்- சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டில் மொத்தம், 63 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளதாக இலங்கையின் சுகாதார அமைச்சு ஏற்றுக்கொண்டுள்ளது.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க நேற்று முன்தினம் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த பரிசோதனையின் போது அடையாளம் காணப்பட்ட மருந்துகளில் சில திரும்பப் பெறப்பட்டுள்ளதுடன் சில மருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

2017 ஆம் ஆண்டிலிருந்து மொத்தம் 585 தரக் குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளதுடன் அதிக எண்ணிக்கையிலான குறைபாடுகள், 2019 இல் பதிவாகியுள்ளன.

தரப் பரிசோதனையில் தோல்வியடைந்த மருந்துகளில் 53 மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டதாகவும், ஒரு சில மருந்துகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டதாகவும் மற்றவை பாகிஸ்தான் மற்றும் பங்காளதேசத்தில் இருந்து பெறப்பட்டவை என்றும் கண்டறியப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# முதுகெலும்பு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பிற்கு செல்லுங்கள்

## கஜேந்திரகுமார் சவால்



(கொழும்பு)

தமிழ் மக்கள் ஒற்றையாட்சியையா அல்லது சமஷ்டியையா விரும்புகிறார்கள் என்பது குறித்து தெரிந்து கொள்வதற்கு முதுகெழும்பு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லுமாறு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சவால் விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர, நீதி மன்றத்தையும் நீதிபதியையும் அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டார்.

இப்படியான ஒருவர்தான் தேசிய பொதுப் பாதுகாப்புக் குழுவின் தலைவராக உள்ளார். பொறுப்புக்கூறல் விடயத்தில் ஏற்கனவே சர்வதேச ரீதியாக இந்த நாடு அவ நம்பிக்கை பெற்றுள்ளது.

இந்த நிலையில், இது போன்றவர்களின் செயற்பாடுகளினால்தான் நாட்டில், சட்டங்கள் பின்பற்றப்படும் விடயத்திலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அத்தோடு, பாராளுமன்ற சுரேன் ராகவனும் சமஷ்டியை வழங்க முடியாது என்று உணர்ச்சியுடன் பேசியிருந்தார்.

தமிழ்த் தேசிய வாதிகள் சமஷ்டி தொடர்பாக பேசுகிறார்கள் என்றும் சமஷ்டி என்பது பிரிவினைவாதம் என்றும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார். இவரது இந்தக் கருத்தானது முட்டாள்தனமான ஒன்றாகும். போர்க்குற்ற வாளியான சரத்வீரசேகர இவ்வாறு பேசுவது சாதாரண விடயம்தான்.

ஆனால், கலாநிதிப் பட்டம் பெற்ற சுரேன்ராகவன், சமஷ்டியை பிரிவினைவாதம் எனக் கூறுவது, அவரிடம் புலமை இல்லை என்பதையே காண்பிக்கிறது.

இதுபோன்றவர்களிடம் நான் சவால் விடுக்கிறேன். முடிந்தால் வடக்கு- கிழக்கில் சர்வஜன வாக்கெடுப் பொன்றை நடத்திக் காட்டுங்கள்.

தமிழ் மக்கள் ஒற்றையாட்சியையா அல்லது சமஷ்டியையா விரும்புகிறார்கள் என்பது அப்போது தெரியவரும். இதற்கு நீங்கள் தயாரா?" என அவர் கேள்வி எழுப்பினார். (நி-5)

# இராசிபலன்

22.07.2023
ஆடி 06, சனிக்கிழமை
சதுர்த்தி காலை 7.47மணிவரை
பூரம் பிற்பகல் 3.54 மணிவரை

சுபநேரம் -3.01-4.31 மணிவரை
இராகுகாலம்-9.01-10.31மணிவரை

சந்திராஷ்டமம்- அவிட்டம், சதயம் ஆடிப்பூரம்.

வள்ளவன்

**மேஷம்**: கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், புண்ணிய காரியத்தில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் வாய்ப்புண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் நிறைவேறும், கௌரவமான நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**மகரம்**: கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பொதுவாழ்வில் கௌரவக் குறைவான சில சம்பவங்கள் இடம்பெறலாம், தேவையற்ற பண விரயம் ஏற்படலாம்.

**ரிஷபம்**: பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**சிம்மம்**: மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், திடீர் பயணம் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்**: செயற்பாடுகளில் அதிகம் பிரயாசை காட்டுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்**: நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வருமானங்கள் திருப்தி தரும் வகையில் அமையும், தொழில் வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**மிதுனம்**: சகோதர வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், போசன சுகமுண்டு, பயணங்களால் பலன் உண்டு.

**கன்னி**: மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு**: ஆன்றோர்கள் சந்திப்புக்கள் இடம்பெறலாம்; எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மீனம்**: இயல்பான வாழ்க்கையில் கௌரவம் அந்தஸ்து கூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கையுடன் பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை தியாகம் செய்வதினால் மட்டுமே பிறரின் உள்ளங்களை நீ வெல்ல முடியும்.

# நல்லூர் பெருந்திருவிழா முன்னாயத்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

**வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா ஒகஸ்ட் 21 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், அதனுடைய ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் யாழ்ப்பாண மாநகர சபையில் நேற்று கலந்துரையாடல் இடம்பெற்றது.**

யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் பல்வேறு தீர்மானங்கள் எட்டப்பட்டன.

குறித்த தீர்மானங்களின் படி,

ஓகஸ்ட் 20 ஆம் திகதி மதியத்தில் இருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் வழமைபோல் போக்குவரத்து முற்றாக தடை செய்யப்பட்டு செப்டெம்பர் 16 ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னர் நள்ளிரவே திறந்து விடப்படும். வர்த்தக நடவடிக்கைகளுக்காக குறித்த நேரத்தில் வாகனங்கள் உட்செல்ல அனுமதிக்கப்படும். வழமை போல் ஆலய சூழலில் வசிப்பவர்கள் வர்த்தகர்களுக்கான பாஸ் யாழ்.மாநகர சபையால் வழங்கப்படும்.

ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித் தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டிகளைத் தவிர எக்காரணம் கொண்டும் வேறு வாகனங்கள் உட் செல்ல அனுமதிக்கப்படாது.

அதேபோலசிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார, விளம்பர நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியாது. ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி திருவிழா நாட்களில் காணொளி பதிவு செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

காலணிகளுடன் ஆலய சுற்று வீதியில் நடமாடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு நேர்த்திக் கடன்களைக் நிறைவேற்ற வருகின்ற தூக்குக்காவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் சிறீ முருகன் தண்ணீர்ப் பந்தலின் முன் இறக்கப்பட்டதும் தூக்குக்காவடி வாகனங்கள் அனைத்தும் செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் வழமைபோல் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ்.மாநகர சபைக்கு முன்பாக உள்ள நல்லூர் குறுக்கு வீதியால் பயணித்து நாவலர் வீதியூடாக ஆனைப்பந்தி சந்தியை அடைந்து யாழ்.நகரை அடைய முடியும்.

யாழ்.நகரில் இருந்து திரும்பும் வாகனனங்கள் அதே பாதையூடாக பருத்தித்துறை வீதியை அடையும். ஆனால் இறுதி விசேட திருவிழாக்களின் போது வழமை போல கச்சேரி நல்லூர் வீதியூடாக நாவலர் வீதியை அடைந்து பயணிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-33)

# பிரதேச சபை உபஅலுவலகங்கள் மக்கள் பணத்தை வீணடிக்கக் கூடாது

## வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர்

(சாவகச்சேரி)

பிரதேச சபைகளின் உப அலுவலகங்கள் மக்களுடைய வரிப் பணத்தை வீணடிப்பவையாக அமைந்து விடக்கூடாது என வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற சாவகச்சேரிப் பிரதேசசபையின் உப அலுவலக திறப்பு விழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்படி அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

பல்வேறு தரப்பட்டவர்களின் முயற்சியின் பலனாக 26 மில்லியன் ரூபாய் செலவில் சாவகச்சேரிப் பிரதேசசபை மிருசுவில் உபஅலுவலகத்தை கட்டி முடித்துள்ளது.

உபஅலுவலகம் ஊடாக கிராம மக்களுக்கு உரிய தரமான சேவை கிடைக்கும் போது மாத்திரமே உபஅலுவலகத்திற்கு செலவிட்ட பணத்திற்கு பெறுமதி கிடைக்கும்.

உபஅலுவலகங்கள்தலைமை காரியாலயத்திற்கு நிகரான சேவையை மக்களுக்கு வழங்க வேண்டும். உபஅலுவலகங்களுக்கு சென்றால் அலைச்சல் ஏற்படும் என்ற மனநிலை மக்களுக்கு ஏற்பட்டு விடக்கூடாது. அவ்வாறான மனநிலை மக்களிடம் ஏற்பட்டால் மக்களின் பணத்தை வீணடித்து உபபணிமனை அமைத்ததாகவே கருத முடியும்.

எனவே பிரதேச சபை செயலாளர் தலைமை காரியாலயத்திற்கு நிகரான விதத்தில் உபபணிமனைகள் சேவையாற்றுவதனை உறுதிசெய்ய வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (4-5-30)

# எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 15 இந்திய மீனவர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 15 பேரும் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் கடந்த 9 ஆம் திகதி அதிகாலை நெடுந்தீவு கடற்பகுதியில் வைத்து தமிழ்நாடு - இராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த 15 மீனவர்கள் இரு படகுகளுடன் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்த 15 மீனவர்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது 15 மீனவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி கஜநிதிபாலன் மீனவர்களை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டு 18 மாதகால சாதாரண சிறைத் தண்டனை என்ற நிபந்தனைகளுடன் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இதனையடுத்து மீனவர்கள் 15 பேரும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு ஓரிரு நாட்களில் விமானம் மூலம் தாயகம் திருப்ப நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவர்களை மெரிகானாவுக்கு அனுப்பி உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவும் உத்தரவிட்டதுடன், படகுக்கான விசாரணை வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் நீதிபதி தெரிவித்தார்.(4-5-60)

# அளவெட்டி தெற்கு முத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு வெளிவயல் ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து 11 தினங்களில் இடம்பெறவுள்ள இவ் மஹோற்சவத்தில் எதிர் வரும் 31 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறவுள்ளது. (4-5)

# 'பொய்மான்' திரைப்படம் நாளை திரையிடல்




(யாழ்ப்பாணம்)

வைத்தியர் ஜெயமோகன் இயக்கிய "பொய்மான்" திரைப்படத்தின் விசேட திரையிடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் திரைத்துறை சார்ந்த விசேட பிரதிநிதிகளுக்கான விசேட திரையிடல் இடம்பெறவுள்ளது.

நவீன தொழில்நுட்ப உபகரணங்களை இணைத்து அவுஸ்திரேலிய மண்ணில் ஷோபனம் கிரியேஷன்ஸ் கலைஞர்களால் உருவாகியுள்ள "பொய்மான்" திரைப்படம், தமிழ்க் கலைஞர்களின் அரியதொரு படைப்பாக எதிர்பார்க்கப்படுவதுடன் இலங்கையிலும் சில காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் அகதிகள் தொடர்பாக பேசும் இவ் முழு நீள திரைப்படத்தில் புலம்பெயர் இளங்கலைஞர்களின் படைப்பாற்றலில் ஜனார்தன், கவிஜா, ஜெயமோகன், ஷர்மினி ஆகியோர் நடித்துள்ளனர். (4-5-33)

# சாவகச்சேரியில் கைவிடப்பட்ட வயல் நிலங்களில் இம்முறை காலபோகச் செய்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சாவகச்சேரி கமநல சேவை நிலைய எல்லைப் பரப்பிற்குள் இதுவரை செய்கை மேற்கொள்ளாது கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் வயல் நிலங்களில் இம்முறை காலபோக நெற்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதாக சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தின் போதே சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தினர் இதனை தெரியப்படுத்தியிருந்தனர்.

அந்தவகையில் சாவகச்சேரி கமநல சேவை நிலைய எல்லைக்குள் 95.63 ஹெக்டேயர் வயல் நிலங்கள் செய்கை மேற்கொள்ளப்படாத நிலையில் காணப்படுவதாகவும் அவற்றில் மந்துவில் வடக்கு பகுதியில் 5.44 ஏக்கர், இடைக்குறிச்சியில் 6 ஏக்கர்,எழுதுமட்டுவாழில் ஒன்றரை ஏக்கர் வயல்கள் கமநல நிலையத்தால் இம்முறை காலபோகத்தில் நெற் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

அதேவேளையில் வேள்ட் விஷன் நிறுவனம் ஊடாகவும் எழுதுமட்டுவாழில் 4 ஏக்கர் வயல் நிலம் இம்முறை புதிதாக செய்கைக்கு உட்படுத்தப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிதாக செய்கை மேற்கொள்ளப்படவுள்ள வயல் நிலங்களை இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் வயல் நிலம் இல்லாத பயனாளிகளுக்கு வழங்கி செய்கை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத நிலையில் காணப்படுகின்ற ஏனைய வயல் நிலங்களையும் எதிர்காலத்தில் செய்கைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தினர் முன்னெடுக்க வேண்டும் என கூட்டத்திற்கு தலைமை வகித்த தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுப லிங்கம் வலியுறுத்தியுள்ளார். (4-5-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருந்தூர் மலையை பௌத்த தொல்பொருள் சின்னமாக பிரகடனப்படுத்த வேண்டும் - வலியுறுத்துகிறார் ஜயந்த

(கொழும்பு)

**முல்லைத்தீவு குருந்தூர் மலையை, பௌத்த தொல்பொருள் சின்னமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர நேற்று பாராளுமன்றில் வலியுறுத்தியுள்ளார்.**



இதுதொடர்பாக பாராளுமன்றில் உரையாற்றிய அவர், இதனை அரசாங்கம் மேற்கொள்ளத் தவறினால், இன ஐக்கியத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்றும் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் பிரிவாத அரசியல்வாதிகள், குருந்தூர் விகாரை வளாகத்தில் பொங்கல் நிகழ்வொன்றை கடந்த சில நாட்களுக்கு முன்னர் நடத்த முயற்சித்தனர். எனினும் பொலிஸார் இதற்கு இடம் கொடுக்கவில்லை.

இந்த நிலையில், சிலர் நேற்றைய தினமும் அங்கே பொங்கல் நிகழ்வொன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர்.

1931 ஆம் ஆண்டு, வெளியிடப்பட்ட வர்த்தமானியில் குருந்தூர்மலை என்பது பௌத்த தொல்பொருள் சின்னமாகவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, அங்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளிலும் அங்கு எந்தவொரு இந்துமத அடையாளங்களும் கண்டெடுக்கப்படவில்லை.

அங்கே எந்த இடத்திலும் தமிழ் எழுத்துக்களோ இந்து மதச் சின்னங்களோ காணப்படவில்லை.

இவ்வாறு இருக்கையில், குருந்தூர்மலை பகுதியில் இந்து மத ஆலயம் இருப்பதாக இந்த பிரிவினைவாதிகள் தெரிவித்து வரும் கருத்துக்களின் காரணத்தினால்தான், அங்கு தற்போது பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எனவே, குருந்தூர்மலையை பௌத்த தொல்பொருள் சின்னமாக மீண்டும் அறிவித்தால், இந்த முரண்பாடுகளை இல்லாது செய்ய முடியும் என நாம் நினைக்கிறோம்.

அவ்வாறு இல்லாவிட்டால், இதனால் பாரிய சர்ச்சைகள் ஏற்படும் என்பதோடு, தேசிய ஐக்கியத்திற்கும் இது பாதிப்பாக அமைந்துவிடும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

## ஹொரண பகுதியில் காணாமல் போன தாய் - சேய் சடலங்களாக மீட்பு



(ஹற்றன்)

ஹொரண - அங்குருவாதொட்ட - ரத்மல்கொட வனப்பகுதியிலிருந்து இளம் தாய் மற்றும் அவரது குழந்தை ஆகியோர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கமைய இரு சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

24 வயதுடைய இளம் தாய் ஒருவரும் அவரின் 11 மாதங்களேயான குழந்தையுமே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த 18 ஆம் திகதி குறித்த இருவரையும் காணவில்லை என அவரின் கணவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

இந்த நிலையில் அவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதோடு, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-5)

## ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்றைய தினம் மேலும் கடுமையான வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

இந்தநிலையில், இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 331. 98 ரூபாவாகவும் கொள்வனவு விலை 318.72 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும் கனேடிய டொலரின் விற்பனை விலை 253.83 ரூபாவாகவும் கொள்வனவு விலை 240.86 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 371.55 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 353.96 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அதேசமயம், ஸ்டெர்லிங் பவுண்டின் இன்றைய விற்பனை பெறுமதி 428.97 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 409.73 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி-5)

## பால்மா நுகர்வு வரிசையில் இலங்கை முன்னணி

(கொழும்பு)

உலகில் அதிக அளவில் பால்மாவை நுகரும் நாடுகளின் வரிசையில் இலங்கை இடம் பிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயத்தை கால் நடை வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

உலகில் அதிக அளவில் பால்மாவை நுகரும் ஐந்து நாடுகளில் இலங்கையும் ஒன்று என அவர் தெரிவித்துள்ளார்.

திரவ பாலின் நுகர்வுடன் ஒப்பிடும்போது பால்மா நுகர்வானது ஆரோக்கியத்திற்கும் போசாக்கிற்கும் பொருத்தமானது அல்ல. திரவ பால் நுகர்வினை பிரச்சாரம் செய்வது சவால் மிக்கது.

இலங்கையில் 337 கால் நடை வள காரியாலயங்கள் காணப்படுவதாகவும் அவற்றைக் கொண்டு திரவ பால் நுகர்வினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு தேவையான பாலின் 40 வீதமான அளவே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் ஏனைய பால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

## தேங்காய் எண்ணெய் இறக்குமதிக்கு 200 ரூபா வரி விதிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்க்கு 200 ரூபா வரி விதிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று பாராளுமன்றத்தில் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கோதுமை மாவுக்கு வரி விதிக்கப்படாமையால் அரசாங்கத்திற்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

## சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகரிடம் கையளிப்பு

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள்சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித்மத்தும பண்டார மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன ஆகியோர் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்துள்ளனர்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் 45 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 250 | 280 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 500 | 500 |
| தக்காளி | 350 | 350 | 500 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 220 | 300 |
| கோவா | 300 | 200 | 300 | 300 |
| கரட் | 350 | 500 | 500 | 550 |
| பூசணி | 140 | 120 | 100 | 150 |
| புடோல் | 160 | 140 | 150 | 200 |
| வாழைக்காய் | 180 | 150 | 150 | 150 |
| சின்ன வெங்காயம் | 450 | 450 | 350 | 500 |
| பெரிய வெங்காயம் | 160 | 240 | 150 | 150 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 500 |
| வெண்டக்காய் | 200 | 170 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 200 | 200 |
| பயற்றங்காய் | 300 | 400 | 180 | 250 |
| லீக்ஸ் | 280 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 300 | 350 | 350 |
| கறிமிளகாய் | 300 | 350 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 300 | 300 |
| போஞ்சி | 500 | 400 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 280 | 280 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 80 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 160 | 250 | 280 |
| வெங்காயப்பூ | 250 | 150 | 300 | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 180 | 200 | 150 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 168

### அந்த காலம் எப்பொழுதும் வண்ண மயமான காலம் தான்



ஓர் இளைஞன் தன் தந்தையைப் பார்த்து கேட்டான் .....

செல்போன், டிவி, கம்ப்யூட்டர், இண்டர்னெட், ஏசி, வாஷிங்மெஷின், கேஸ் கனெக்ஷன், மிக்ஸி இவை எல்லாம் இல்லாமல் உங்களால் எப்படி வாழ முடிந்தது?

தந்தை பதில் கூறினார்

மரியாதை, மானம், மதிப்பு, வெட்கம், உண்மை, நற்குணம், நன்னடத்தை, நேர்மை, தெய்வபக்தி, தர்மம் கற்பு இவை அனைத்தும் இல்லாமல் இப்போது நீங்கள் எப்படி வாழப் பழகி விட்டீர்களோ அப்படி..

ஆம் 1940-1990 இற்குள் பிறந்த நாங்கள் உண்மையாகவே வரம் பெற்றவர்கள்.

நாங்கள் சைக்கிள் ஓட்டினோம் ஹெல்மெட் அணியவில்லை.

பள்ளி முடிந்ததும் தோழர்களுடன் பொழுது சாயும் வரை விளையாடினோம். டி.வியின் முன் உட்கார்ந்ததில்லை. உயிருள்ள தோழர்களுடன் விளையாடினோம். இண்டெர்நெட்டில் அல்ல.

தாகம் எடுக்கும்போது குழாய் தண்ணீர் குடித்தோம். மினரல் வாட்டர் அல்ல. ஒரே ரம்ளர் ஜூஸை மாற்றி மாற்றி நான்கு நண்பர்களும் குடிப்போம். எந்த தொற்று நோயும் வந்ததில்லை...

தினமும் அரிசி சாதம் தின்போம். ஆனாலும் எடை கூடியதில்லை. சர்க்கரை நோய் வந்ததில்லை.

எங்கு போனாலும் வெறுங் காலுடன் நடப்போம். எந்த பாதிப்பும் வந்ததில்லை.

எங்கள் பெற்றோர் எந்த ஊட்ட சத்து உணவும் தந்ததில்லை. ஆனாலும் ஆரோக்கியமாகவே இருந்தோம்

எங்கள் பெற்றோர்கள் பணக்காரர்கள் அல்ல.. ஆனாலும் அன்புக்கும் பாசத்துக்கும் பஞ்சம் இல்லை.

பெற்றோர்களோடே படுத்து உறங்கினோம். ஹாஸ்டல் அறைகளில் அல்ல. உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீட்டிற்கு முன்னறிவிப்பு இன்றி போவோம்.வரவேற்பிற்கும் விருந்திற்கும் குறை இருந்ததில்லை


எங்களின் போட்டோக்கள் எல்லாம் கருப்பு வெள்ளை தான். ஆனால் எங்களின் நினைவுகளோ வண்ண மயமானவைகள்.

எங்களின் குடும்பங்கள் எல்லாம் அன்பை கொட்டும் கூட்டுக் குடும்பங்கள். உங்களைப்போன்று தனிக் குடித்தனம் அல்ல.

எங்கள் தலைமுறையினர் எல்லோரும் பெற்றோர்களின் கட்டளைக்கு கட்டுப்பட்டு வளர்ந்தோம். பெற்றோர்களும் பிள்ளைகளின் உணர்வுக்கு மிகுந்த மதிப்பு அளித்தவர்கள்.

ஆகவே எங்களை பயன்படுத்திக் கொள்ளுங்கள். அன்பாக இருங்கள், கற்றுக் கொள்ளுங்கள் நாங்கள் இம்மண்ணிலிருந்து மறையும் வரை.

## நிலவில் விண்கலத்தை தரையிறக்கும் நான்காவது நாடாக இந்தியா



(டில்லி)

இந்தியாவின் மூன்றாவது சந்திர ஆய்வுப் பணியாக தற்போது சந்திரயான்-3 ஏவப்பட்டுள்ள நிலையில் அது வெற்றியளித்தால் நிலவின் மேற்பரப்பில் தனது விண்கலத்தை தரையிறக்கும் நான்காவது நாடாக இந்தியா விளங்குகிறது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள விண்வெளி மையத்தில் இருந்து அண்மையில் சந்திரயான்-3 விண்கலம் ஏவப்பட்டது. 2019 இல் சந்திரயான்-2 விண்கலம் அதன் மென்மையான தரையிறக்கத்தின் போது சவால்களை எதிர்கொண்ட பிறகு, இஸ்ரோவின் அடுத்தகட்ட முயற்சியாக இது அமைந்துள்ளது.

இந்த முயற்சி வெற்றியளித்தால் சந்திரனின் தென் துருவத்தில் தரையிறங்கும் முதல் விண்கலமாக சந்திரயான்-3 இருக்கும் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. அத்தோடு இது இந்தியாவின் தொழில்நுட்ப வலிமை மற்றும் தைரியமான விண்வெளிப் பயண லட்சியங்களை உலகிற்கு எடுத்துக் காட்டும்.

சந்திரனின் மேற்பரப்பில் பாதுகாப்பான மற்றும் மென்மையான தரையிறக்கம், சந்திரனில் ரோவர் உலாவுதல் மற்றும் அறிவியல் சோதனைகளை நடத்துவதே சந்திரயான்-3 பணியாகும்.

குறித்த விண்கலம் பூமியிலிருந்து சந்திரனுக்கு பயணம் சுமார் ஒரு மாதம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது அதாவது ஒகஸ்ட் 23 அன்று தரையிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சந்திரயான்-2 இல் நிலவின் மேற்பரப்பில் தரையிறங்க முடியாதபோது என்ன தவறு ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து மேலும் பல தொழில்நுட்பங்களை புகுத்தி உள்ளதாகவும் இந்த முறை வெற்றியைப் பெறுவோம் என்றும் இஸ்ரோவின் முன்னாள் பணிப்பாளர் கே.சிவன் தெரிவித்துள்ளார். (நி-5)

## பிரித்தானிய கடவுச்சீட்டுகளில் ஏற்படவுள்ள பெரும் மாற்றம்

(லண்டன்)

பிரித்தானியாவில் 70 ஆண்டுகளுக்கு பிறகு இந்த வாரம் அறிமுகப்படுத்தப்படும் அனைத்து கடவுச்சீட்டுகளிலும் பெரிய மாற்றம் ஏற்படவுள்ளது.

இந்த வாரத்தில் இருந்து மன்னர் பெயரால் இனி பிரித்தானிய கடவுச்சீட்டுகள் வழங்கப்பட உள்ளன.

இந்த நிலையில் 70 ஆண்டுகளுக்கு பிறகு முதன் முறையாக ஒரு பெரிய மாற்றம் செய்யப்படுவதால், இந்த வாரத்திலிருந்து புதிய கடவுச்சீட்டுகளைப் பெறும் பிரித்தானியர்கள் இதனை பார்க்கலாம்.

கடைசி ஆண் மன்னரான சார்லஸின் தாத்தா கிங் ஜார்ஜ் VI இன் ஆட்சியின் முடிவில் 1952 இற்குப் பின்னர் முதல் முறையாக "His Majesty" என்ற தலைப்பில் 3 ஆம் சார்லஸ் மன்னரின் பெயரில் கடவுச்சீட்டுகளில் "His Majesty" என்ற பட்டத்தை இந்த வாரம் வெளியிடவுள்ளது.

மேலும் பல தசாப்தங்களாக, ராணி 2 ஆம் எலிசபெத் ஆட்சியின் போது "Her Majesty" என்ற பெயரில் அதிகாரபூர்வ பயண ஆவணங்கள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இது "வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம்" என்று உள்துறை செயலர் சுயெல்லா பிரேவர்மேனால் விபரிக்கப்பட்டது. (நி-5)

## சுவீட... தூத...

(டெஹ்ரான்) —

ஈராக்கின் தலை...
மானது நேற்று ...
க்காரர்களால் முற்று...

சுவீடனில் அண்மையில் இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆன் எரிக்கப்பட்டமைக்கு எதிராக இஸ்லாமியர்கள் அதிகமாக வாழும் நாடுகளில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையிலேயே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சு... ஆம்... ஸ்ட... உள்... தான... குர்ஆ... டன்,... த்தில...

## சுவிஸின் ஆல்ப்... 9000 அடி உ...



(பேர்ன்)

சுவிஸில் ஆல்ப்ஸ் மலையில் உச்சிக்கு சென்ற கேபிள் கார் தி... அதில் ... சுமார் ...

## பத்திரிகை துறையிலும் ச... பரிசோதனை மேற்...

(வோஷிங்டன்)

செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு உலகெங்கிலும் பிரபலமடைந்து வருகிறது. அதனை கொண்டு பல்வேறு தொழில்துறைகளில் என்னென்ன மாற்றங்களை கொண்டு வர முடியும் என்பதை அமெரிக்க முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆராய்ந்து வருகின்றன.

பத்திரிகை துறையிலும் பதிப்பக துறையிலும் கட்டுரைகளையும் செய்திக் கட்டுரைகளையும் எழுதும் வேலை உட்பட ஏராளமான பணிக... ஒரு ... நிறுவ... செயற்... பொரு... படுத்த... கிறது. மற்று... செய்தி... இக்கரு... தாகவு... வும் ...

இ... போஸ்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# டன் தூதரகம் தீக்கிரை
# தர் வெளியேற்றம்

**லைநகரான பாக்தாத்தில் உள்ள சுவீடன் தூதரக று முன்தினம் 100 இற்கும் மேற்பட்ட போராட்ட முற்றுகையிடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.**



சுவீடனில் கடந்த மாதம் 28 ஆம் திகதி சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமின் மையப் பகுதியில் உள்ள மசூதி அருகில், 37 வயதான ஈராக்கிய அகதி ஒருவர் குர்ஆன் நூலை கிழித்து எறிந்ததுடன், அவற்றைத் தீயிட்டும் கொளுத்தினார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில் இஸ்லாமிய நாடுகள் பலவும் சுவீடன் அரசுக்கு எதிராக தமது கண்டனங்களைத் தெரிவித்து வந்தன.

இந்நிலையிலேயே நேற்று முன்தினம் தினம் சுவீடன் தூதரகம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் இத்தாக்குதல் சம்பவத்தில் தூதரக அதிகாரிகள் பாதிக்கப்படவில்லை எனவும் அவர்கள் பாதுகாப்பாக உள்ளனர் எனவும் சுவீடன் வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருந்தது.

இந்நிலையில் தற்போது சுவீடன் தூதர் ஜெசிக்காவும் ஈராக்கை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (நி-5)

## ல்ப்ஸ் உச்சியில் பழுதடைந்த கேபிள் கார்
## டி உயரத்தில் சிக்கிய பயணிகள்



கார் திடீரென பழுதடைந்ததால் அதில் சிக்கியிருந்த பயணிகள் சுமார் 300 பேரை ஹெலிகொப்டர்கள் மூலம் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சுவிஸில் உள்ள லெஸ் டயபிள்ரெட்ஸ் மலைப் பகுதியில் உள்ள பிரபலமான பனிப் பாறையில் கிளேசியர் 3000 ஸ்கை ரிசார்ட் வரையிலான கேபிள் காரில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் தொழில்நுட்பக் கோளாறு கண்டறியப்பட்டது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் குறித்த கேபிள் காரில் ஒரு சிறப்பு இயந்திரம் பொருத்தப்பட்டிருப்பதாகவும் இதன் மூலம் சுற்றுலாப் பயணிகளை வெளியேற்ற முடியும் என்றும் கேபிள் கார் நிலையத் தலைவர் தெரிவித்தார்.

ஆரம்பத்தில், 2,971 மீற்றர் (9,747 அடி) உயரத்தில் இருந்த சுற்றுலாப் பயணிகள், தொழில்நுட்ப ஊழியர்கள் சிக்கலைச் சரி செய்யும் நேரத்தில் கண்கவர் காட்சிகளைக் காத்திருந்து மகிழும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

மேலும், மக்கள் காத்திருக்கும் போது மலை உச்சி உணவகத்தில் பானங்கள் மற்றும் உணவு வழங்கப்பட்டது.

இந்த மீட்புப் பணிக்காக இரண்டு ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்ட நிலையில், 300 பேர் மீட்கப்பட்டனர்.(நி-5)

## ருவாண்டா படகு விபத்தில் 10 சிறுவர்கள் உயிரிழப்பு

(கிகாலி)

மத்திய ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் ஏற்பட்ட படகு விபத்தில் 10 சிறுவர்கள் பலியாகியுள்ளனர்.

இது குறித்து அந்த நாட்டின் தெற்கு மாகாண ஆளுநர் அலைஸ் கேயி டேசி நேற்று முன்தினம் கூறியதாவது,

நியாபரோங்கோ ஆற்றின் குறுக்கே சென்று கொண்டிருந்த படகு கடந்த திங்கட் கிழமை கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், கோடை விடுமுறை முடிந்து பாடசாலைக்குத் திரும்பிக் கொண்டிருந்த 10 சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். 3 மாணவர்களும் ஒரு நபரும் மீட்கப்பட்டனர்.

விபத்தில் பலியான அனைவரும் 11 முதல் 15 வயதுக்குட்பட்டவர்கள்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. கட்டுமானப் பொருட்களுடன் அந்த மாணவர் களையும் படகில் ஏற்றிய தால் அது பாரம் தாங்காமல் ஆற்றுக்குள் மூழ்கியதாக முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்றார் அவர்.

இந்த விபத்து தொடர்பாக ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். ஆற்றில் மூழ்கிய படகை அவர் தான் வாடகைக்கு எடுத்திருந்ததாகவும் விபத்துக்கான காரணம் குறித்து அவரிடம் விசாரணை நடைபெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

## லும் கால்பதிக்கும் செயற்கை நுண்ணறிவு
## மேற்கொண்ட கூகுள் நிறுவனம்

பணிகள் உள்ளன. இந்த துறையில் ஒரு புதிய முயற்சியாக கூகுள் நிறுவனம், இப்பணிகளுக்கு தனது செயற்கை நுண்ணறிவு மென்பொருள் கருவிகளை பயன்படுத்துவதை பரிசோதித்து வருகிறது. எடுத்துக்காட்டாக பதிப்பக மற்றும் செய்தி நிறுவனங்கள், செய்திகளையும் கட்டுரைகளையும் இக்கருவிகளை பயன்படுத்தி எளிதாகவும் சிறப்பாகவும் விரைவாகவும் கொண்டு வர முடியும்.

இதற்காக வோஷிங்டன் போஸ்ட், வால் ஸ்ட்ரீட் ஜர்னல், மற்றும் நியூயோர்க் டைம்ஸ் ஆகிய செய்தி நிறுவனங்களுடன் கூகுள் ஆலோசனை நடத்தியிருப்பதாக தெரிகிறது.

இக்கருவிகளால் பத்திரிகையாளர்கள் தங்களின் வேலை மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்த முடியும். எடுத்துக்காட்டாக, தலைப்புகளுக்கும் அவர்கள் பயன்படுத்தும் எழுத்து வடிவங்களுக்கும் எண்ணற்ற வாய்ப்புகளை மென்பொருள் வழங்கும். இதிலிருந்து ஒன்றை அவர்கள் தேர்ந்தெடுத்து விரைவாக தங்கள் பணிகளை முடிக்க முடியும்.

ஆனால் கட்டுரைகளை உருவாக்குவதிலும் உண்மையை சரிபார்ப்பதிலும் பத்திரிகையாளர்கள் செய்யும் பணிகளுக்கு இந்த மென்பொருள் மாற்றாக அமையாது. ஆகையால் அவர்களின் வேலைக்கு எந்த பாதிப்பும் இருக்காது என தெரிகிறது.

கூகுளின் இந்த முயற்சி தற்போது ஆரம்ப கட்டத்தில் இருக்கிறது. நியூயோர்க் டைம்ஸ் நிறுவனத்திடம் பரிசீலிக்கப்பட்ட கூகுளின் ஏஐ கருவி "ஜெனிசிஸ்" என்று அழைக்கப்படுவதாக தெரிகிறது. (நி-5)

## கொத்து குண்டுகளை பயன்படுத்த ஆரம்பித்துள்ள உக்ரைன்

(வோஷிங்டன்)

உக்ரைன் தான் வழங்கிய கொத்துக்குண்டுகளை பயன்படுத்துகின்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு பேச்சாளர் ஜோன்கிர்பி இதனை தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் பாதுகாப்பு முன்னரங்குகள் மற்றும் நடவடிக்கைகளிற்கு எதிராக உக்ரைன் கொத்துக்குண்டுகளை பயன்படுத்துகின்றது. அது பலனளிக்கின்றது என ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் உரிய விதத்தில் கொத்துக்குண்டுகளை பயன்படுத்துகின்றது என தெரிவித்துள்ள அவர்கள் அதனை பலன் அளிக்கக்கூடிய விதத்தில் பயன்படுத்துகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். 100 இற்கும் மேற்பட்ட நாடுகள் கொத்துக்குண்டுகளை தடை செய்துள்ளன.

உக்ரைனின் வெடிபொருட்களை வலுப்படுத்துவதற்காக கொத்துக்குண்டுகளை அமெரிக்கா உக்ரைனிற்கு வழங்கியுள்ளது. ரஷ்ய படையினரின் நிலைகளை அழிப்பதற்கு மாத்திரம் கொத்துக்குண்டுகளை பயன்படுத்துவதாக உக்ரைன் உறுதியளித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக உணவு திட்டத்தால்
# கிளிநொச்சியில் உணவு பாதுகாப்பை ஊக்குவிக்க விசேட திட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் மற்றும் உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி ஜெராட் றெபெல்லா ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

உலக உணவுத் திட்டமானது கிளிநொச்சி மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பை ஊக்குவிக்கும் நோக்கில், போஷாக்கு உலருணவு நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கரைச்சி பிரதேச செயலகத் திற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள், நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், குறைந்த பொருளாதார வசதியுடைய குடும்பங்கள் என்ற வகைகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு போஷாக்கு உலருணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உலருணவுப் பொதிகளை வழங்கவுள்ளது.

இதன்போது, குறித்த திட்டம் தொடர்பாக அறிமுக உரையினைத் தொடர்ந்து, கிளிநொச்சி மாவட்டத்தில் குறித்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வழிவகைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

(4-5-315)

# இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக செய்கையில் முறைகேடுகள்

## ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான 2023 இற்கான சிறுபோக செய்கையில் பயிர்ச்செய்கை குழுவின் தீர்மானங்களை மீறி பல்வேறுபட்ட முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளதாக மாவட்ட செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக செய்கையில் கமக்கார அமைப்புகள் மாவட்ட பயிர்ச் செய்கைக் குழுவின் தீர்மானங்களை மீறி மேலதிக விதைப்புக்களையும் பங்கு மோர்ச்சிகளையும் செய்துள்ளதாக பல்வேறுபட்ட முறைப்பாடுகள் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் துறைசார் அதிகாரிகள் சிலரால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக செய்கை விஸ்தீரனத்தை ஆய்வுக்கு உட்படுத்தும் வகையில் கடந்த ஏப்ரல் மாதம் பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர், பிரதி ஆணையாளர் கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலகங்களின் திட்டமிடல் பணிப்பாளர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதி அடங்கிய குழு நியமிக்கப்பட்டு ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுடன் அது தொடர்பான அறிக்கை நேற்று முன்தினம் மாலை வெளியிடப்பட்டது.

அதன்படி குறித்த அறிக்கையிலேயே பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (4-5-315)

# கிளிநொச்சி விவசாய குழுக்கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராய்வு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திற்கான விவசாய குழுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற குறித்த கல்ந்துரையாடலில், மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கை மற்றும் ஏனைய விவசாயச் செய்கை தொடர்பான விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக சிறுபோக பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், மாவட்டத்தில் விவசாய செய்கை தொடர்பில் துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை இவ்வாண்டுக்குரிய இரணைமடுக்குளத்தின் கீழ் சிறுபோக செய்கையில் விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் மேலதிக செய்கைகள் தொடர்பில் ஆராயும் வகையில் மாவட்ட அரச அதிபரால் நியமிக்கப்பட்ட பிரதி ஆணையாளர், பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர், கரைச்சி பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர், கண்டாவளை பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் உள்ளடங்கிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும் நீர்ப்பாசன பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயத் துறை சார்ந்த திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.(4-5-315)



கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியில் அமரர் சின்னத்தம்பி நடேசபிள்ளை ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட ஆருக்ஷ்கிருத்திக் கலையரங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. (படம்- யதுபாஸ்கரன்)

# முறைப்பாடுகளை ஏற்க பொலிஸார் மறுத்தால் உடன் அறியத் தரவும்

## வவு.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

(குருமன்காடு)

பொதுமக்களின் முறைப்பாடுகளை பொலிஸார் ஏற்க மறுத்தால் உடன் அறியத் தருமாறு வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சீ.பி. விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கும் சிரேஷ்ட அத்தியட்சகருக்கும் இடையில் வவுனியாவின் தற்போதைய நிலைமைகள்தொடர்பானவிசேட கலந்துரையாடல் ஒன்று அத்தியட்சகரின் காரியாலயத்தில் இடம்பெற்றிருந்தது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்



ளனர். இருப்பினும் வவுனியா மாவட்டத்தில் சில பொலிஸ் நிலையங்களில் பொதுமக்களின் பல முறைப்பாடுகளை பொலிஸார் ஏற்க மறுப்பதாக சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அத்துடன் திருட்டு சம்பவங்கள் பற்றி பொதுமக்கள் பொலிஸாரிடம் முறையிடும் போதும் ஒரு சில பொலிஸார் அதன் உண்மையான பெறுமதிகளை மறைத்து தவறான அதாவது குறைந்த பெறுமதிகளை முறைப்பாட்டில் பதிவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறு செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இது போன்ற சம்பவங்கள் வவுனியாவில் இடம்பெற்றால் பொதுமக்கள் உடனடியாக எனக்கு அறியத் தரவும். எனது தொலைபேசி இலக்கமான 071 859 1340 என்ற இலக்கத்திற்கு பொதுமக்கள் எந்த நேரத்திலும் முறைப்பாடு செய்ய முடியும். வேலைப்பளு காரணமாக தொலைபேசியில் பதில் அளிக்காத சந்தர்ப்பத்தில் குறித்த தொலைபேசிக்கு தன்மீள தொடர்பு ஏற்படுத்தப்பட்டு முறைப்பாடு பெறப்படும் என அவர் தெரிவித்தார். (4-5-250)

# வவுனியாவில் பாரவூர்தி குடைசாய்ந்து விபத்து

## இருவர் படுகாயம்



(குருமன்காடு)

வவுனியா பறனட்டகல் பகுதியிலே பாரவூர்தி குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் சாரதி மற்றும் நடத்துநர் இருவரும் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை முருகண்டியில் இருந்து வவுனியா நோக்கி வந்த பாரவூர்தி பறனட்டகல் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து குடை சாய்ந்தே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா ஓமந்தை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (4-5-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2023 - 17.08.2023

## பணவரவு திருப்திகரமாக இருக்கும்!



**திட்டம் போட்டுச் செயலாற்றும் தனுசு இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் குரு உங்கள் இராசியைப் பார்க்கிறார். சகாய ஸ்தானாதிபதி சனி வக்கிரம் பெற்றிருக்கிறார். பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய், சுக்கிரன் ஒன்று கூடி "சுக்கிர மங்கல யோக"த்தை உருவாக்குகிறார்கள்.

பொதுவாக குரு பகவான் இராசியைப் பார்க்கும் பொழுது, எல்லா வழிகளிலும் நன்மை கிடைக்கும். எடுத்த காரியங்கள் எல்லாம் வெற்றியாகும். நல்லது நடக்க நண்பர்கள் உதவிக்கரம் நீட்டுவர். நாட்டுப்பற்று மிக்கவர்களுக்கு நல்ல பொறுப்புகள் வந்துசேரும். கூட்டு முயற்சியில் இருந்து விலகித் தனித்து இயங்க வாய்ப்புகள் கைகூடிவரும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும்.

**மேஷ - குரு சஞ்சாரம்**

நவக்கிரகத்தில் சுபகிரகமான குரு பகவான் இப்பொழுது மேஷ இராசியில் சஞ்சரிக்கிறார். குரு உங்கள் இராசிக்கு அதிபதி என்பதால் அவரது பார்வை சிறப்பு வாய்ந்ததாகும். உங்கள் இராசியையும் 9, 11 ஆகிய இடங்களையும் பார்ப்பதால் எல்லா வழிகளிலும் நன்மை கிடைக்கப் போகிறது. தேக்க நிலை மாறித் தெளிவு பிறக்கும்.

ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள். பார்க்கும் தொழில் எதுவாக இருந்தாலும் அதில் பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். குருவின் பார்வை 9,11 ஆகிய இடங்களில் பதிவதால் பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அன்பு நண்பர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவர். ஆதாயம் தரும் தகவல் அதிகமாகவே கிடைக்கும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். லாப ஸ்தானம் புனிதமடைவதால் தொழில் வளர்ச்சியில் இருந்த குறுக்கீடுகள் அகலும். வாடகைக் கட்டடத்தில் நடைபெறும் தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும்.




**சிம்ம - புதன்**

ஆடி 7 ஆம் திகதி, சிம்ம இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். எனவே படித்து முடித்து வேலையில்லாமல் இருக்கும் வாழ்க்கைத் துணைக்கு நல்ல வேலை கிடைக்கும். அதன் மூலம் உதிரி வருமானங்கள் வந்து உள்ளத்தை மகிழ்விக்கும். இடம் வாங்குவது, வாங்கிய இடத்தில் மனை கட்டத் தொடங்குவது பற்றி சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் கேட்ட இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மேலிடத்து ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்குப் பணியாளர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் உடன் பணிபுரிபவர்களிடம் உங்கள் முன்னேற்றம் பற்றித் தெரிவிக்க வேண்டாம். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

மாணவ - மாணவிகள், ஆசிரியர்களின் ஒத்துழைப்போடு நல்ல முன்னேற்றம் காண்பர். பெண்களுக்கு குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். சொத்துகள் வாங்கும் முயற்சி கைகூடும். கணவன் - மனைவிக்குள் பாசமும் நேசமும் அதிகரிக்கும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## தொழில் வளம் சிறப்பாக அமைய நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்!



**மனதில் உள்ள வருத்தங்களை மறைத்துக் கொண்டு பேசும் மகர இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் இருந்தே சனி வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. எனவே இந்த வக்கிர இயக்க காலத்தில் குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். செலவு நடைகள் கூடுகின்றதே என்று கவலைப்படுவீர்கள்.

செயற்பாடுகளில் தேக்க நிலை ஏற்படும். ஊக்கமும் உற்சாகமும் குறையலாம். செவ்வாயின் பார்வை சனியின் மீது பதிவதால் மிகுந்த கவனத்தோடு செயற்பட வேண்டிய நேரம் இது.

**மேஷ - குரு சஞ்சாரம்**

நவக்கிரகங்களில் சுபகிரகமாக விளங்கும் குரு பகவான், இப்பொழுது உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எனவே அர்த்தாஷ்டம குரு ஆரம்பிக்கிறது. எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. பயணங்களால் விரயம் உண்டு.

ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். மருத்துவச் செலவு உண்டு. குருவின் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் வந்து அலைமோதும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்குவீர்கள்.

குருவின் பார்வை 10, 12 ஆகிய இடங்களில் பதிவது யோகம்தான். தொழில் வளம் சிறப்பாக அமைய நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். ஒரு சிலருக்குப் புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகும். உத்தியோகத்தைப் பொறுத்த வரை கேட்ட சலுகைகள் கிடைக்கும். இலாகா மாற்றங்கள் இனிமை தரும்.

வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வசூலாகும். கட்டடப் பணி பாதியில் நிற்கின்றதே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது அது முழுமை அடையும். புகழ் மிக்க தலங்களுக்குச் சென்று வேண்டுதல்களை நிறைவேற்றுவீர்கள்.




**சிம்ம - புதன்**

ஆடி மாதம் 7 ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் அஷ்டமத்தில் சஞ்சரிக்கப் போவது யோகம்தான். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். எனவே நிதிப் பற்றாக்குறை அகலும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும்.

மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்பு மாறும். பூர்வீகச் சொத்துகளை விற்றுவிட்டுப் புதிய சொத்துகளை வாங்கலாமா? என்று சிந்திப்பீர்கள். பெற்றோரின் மணிவிழாக்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள்.

பொதுவாழ்வில் உங்களுக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. வியாபாரம், தொழில் செய்பவர்கள் பழைய தொழிலை விட்டுவிட்டுப் புதிய தொழில் தொடங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உடல்நலத் தொல்லை உருவாவதன் காரணமாக அடிக்கடி விடுமுறை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். மாணவ - மாணவிகளுக்கு எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். பெண்களுக்கு விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நேரம் இது. குடும்ப விவகாரத்தில் மூன்றாம் நபரின் தலையீட்டைத் தவிர்ப்பது நல்லது. கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெற வழிபிறக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 236





"தாத்தா! இம்மாதிரி உபதேசம் தாங்கள் இதற்கு முன் எத்தனையோ தடவை செய்திருக்கிறீர்கள்."

"செய்திருக்கிறேன். ஆனால் ஒன்றும் பயன்படவில்லை என்கிறாயா? பேசாமல் என்னை ஊருக்குத் திரும்பிப் போகச் சொல்லுகிறாயா?"

"இல்லை, இல்லை! இப்போது நடக்க வேண்டிய காரியம் என்னவென்று சொல்லுங்கள்."

"உன் சகோதரன் அருள்மொழியை உடனே இவ்விடத்துக்கு அழைத்துக் கொள்ள வேண்டும். நீயும் உன் சகோதரனும் பிரிந்திருக்கவே கூடாது."

"தாத்தா! இது என்ன யோசனை? அருள்மொழி இங்கே வந்துவிட்டால் இலங்கை யுத்தம் என்ன ஆகிறது?"

"இலங்கை யுத்தம் இப்போது ஒரு கட்டத்திற்கு வந்திருக்கிறது, அநுராதபுரத்தைப் பிடித்தாகிவிட்டது. இனி அங்கே மழைக் காலம். இனி நாலு மாதத்திற்கு ஒன்றும் செய்ய முடியாது. பிடித்த இடத்தை விட்டுக் கொடாமல் பாதுகாத்து வர வேண்டியதுதான். இதை மற்ற தளபதிகள் செய்வார்கள். அருள்மொழி இச்சமயம் இங்கே இருக்க வேண்டியது மிகவும் அவசியம். கரிகாலா! உண்மையை மூடி மூடி வைப்பதில் பயன் என்ன? விஜயாலய சோழரின் குலத்துக்கும் அவர் அடிகோலிய சோழ சாம்ராஜ்யத்துக்கும் பேராபத்து வந்திருக்கிறது. நீயும் உன்னைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் இப்போது ஒரே இடத்தில் தங்கிச் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம்முடைய பலத்தையெல்லாம் திரட்டி வைத்துக் கொள்ளவும் வேண்டும். எப்போது என்ன விதமான அபாயம் வரும் என்று சொல்ல முடியாது.

"தாத்தா! இது என்ன இப்படி என்னைப் பயமுறுத்துகிறீர்கள்? என் கையில் வாள் இருக்கும் வரையில் எனக்கு என்ன பயம்? எப்படிப்பட்ட அபாயம் வந்தால் தான் என்ன? தன்னந்தனியாக நின்று சமாளிப்பேன். எத்தகைய அபாயத்துக்கும் நான் பயப்படுகிறவன் அல்ல."

"பிள்ளாய்! நீ எப்படிப்பட்ட தைரியசாலி என்று எனக்குச் சொல்ல வேண்டுமா? ஆயினும், திருவள்ளுவர் பெருமான் சொல்லியிருப்பதையும் சில சமயம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்!"

என்று அந்த மகான் சொல்லியிருக்கிறார். போர்க்களத்தில் பகைவர்களுக்கு எதிரெதிரே நின்று போரிடும் போது அச்சம் கூடாது. அப்படிப் பயப்படுகிறவன் கோழை. அவ்விதம் பயப்படுகிற பிள்ளை என் வம்சத்தில் பிறந்தால் அவனை நானே இந்தக் கிழடாய்ப் போன வலுவிழந்த கையினால் வெட்டிப் போட்டு விடுவேன். ஆனால் மறைவில் நடக்கிற சதிகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் கண்ணுக்குத் தெரியாத அபாயங்களுக்கும் பயப்பட்டேயாக வேண்டும். பயப்பட்டு, அந்தந்த நிலைமைக்குத் தகுந்த முன் ஜாக்கிரதையும் செய்து கொள்ள வேண்டும். அரச குலத்தில் பிறந்து சிம்மாசனத்துக்கு உரியவர்கள் இது விஷயத்தில் அஜாக்கிரதையாக இருக்கக் கூடாது. இருந்தால் நாட்டுக்கே நாசம் விளையும்."

"தாத்தா! அப்படி என்ன இரகசிய அபாயங்களைத் தாங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? சற்று விளக்கமாகச் சொன்னால்தானே நாங்கள் ஜாக்கிரதையாயிருக்க முடியும்.?"


"சொல்லத்தான் வருகிறேன். சில நாளைக்கு முன்னால் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் அர்த்த ராத்திரி வேளையில் ஒரு கூட்டம் நடந்தது. அதற்குப் பெரிய பழுவேட்டரையர் வந்திருந்தார். இன்னும் தென்னவன் மழவராயர், குன்றத்தூர்க் கிழார், வணங்காமுடி முனையரையர், அஞ்சாத சிங்க முத்தரையர், இரட்டைக் குடை ராஜாளியார் இவர்கள் எல்லாரும் வந்திருந்தார்களாம்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மூன்று மீன்கள்



ஒரு சிறிய குளத்தில் மூன்று மீன்கள் வாழ்ந்து வந்தன. முதல் மீன் தனக்குத் துன்பம் வரும் முன்பே தப்பித்துக் கொள்ள விரும்பும். இரண்டாவது மீன் தனக்குத் துன்பம் வரும்போது தப்பித்துக் கொள்ள வழி தேடும். மூன்றாவது மீன் தனக்குத் துன்பம் வந்தால் அந்தத் துன்பத்தை ஏற்றுக் கொள்ளும். இந்த மூன்று மீன்களும் நண்பர்களாக வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள் மீனவர்கள் இருவர் குளக்கரைக்கு வந்தனர். குளத்தில் நீர் குறைவாக இருந்ததால் நாளை வந்து குளத்திலுள்ள மீன்களையெல்லாம் பிடித்துச் செல்லலாம் என்று பேசிக் கொண்டனர்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த முதலாவது மீன், ஓடிச் சென்று தன் நண்பர்கள் இருவரிடமும் அதைப் பற்றிக் கூறி எச்சரிக்கை செய்தது. பின்னர், அந்தக் குளத்தை விட்டு ஒரு வாய்க்காலின் வழியே வெளியேறி வேறு இடத்துக்குச் சென்று விட்டது.

இரண்டாவது மீன், நாளை தானே, அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்றது. மூன்றாவது மீன், வருவது வரட்டும்! எது நடந்தாலும் அது விதி வசம்தான் என்று சும்மா இருந்தது.

மறுநாள் மீன் பிடிப்பவர்கள் வந்து குளத்திற்குள் வலையினை வீசினர். இரண்டாவது மீனும் மூன்றாவது மீனும் வலையில் அகப்பட்டன.

இரண்டாவது மீன் மீனவர்களிடமிருந்து தப்பிப்பதற்காக தான் இறந்து விட்டது போல் நடித்தது. அதனைப் பார்த்த மீனவர்கள், இறந்த மீன் நமக்கு எதற்கு? என்று நினைத்து, அதனை வலையிலிருந்து எடுத்து மீண்டும் குளத்திற்குள்ளேயே எறிந்து விட்டனர். அந்த மீன் குளத்திற்குள் ஓடிச் சென்று ஒளிந்து கொண்டது.

மூன்றாவது மீன் வலைக்குள்ளேயே துள்ளிக் கொண்டிருந்தது. அதனை அவர்கள் பிடித்துச் சென்றனர்.

நீதி-ஒரு சிக்கல் வரும் முன்னர் தப்பித்துக் கொள்பவரும் சிக்கல் வருகின்ற போது தப்பித்துக் கொள்பவரும் எப்போதுமே இன்பமடைவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அறிவினால் தவிர்க்க முடியாத ஒரு செயல் தாமதத்தால் நல்ல பலனை அளிக்கும் விதத்தில் முடிகின்றது. – செனேக்கா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்களக் கூனிகள் இருக்கும்வரை அயோத்தியில் பட்டாபிஷேகம் ஏது?

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் மோடியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்திக்கவுள்ளார் என்ற தகவலை அடுத்து, இனப் பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்துமாறு ஈழத் தமிழ் அரசியல் தரப்புகள் பிரதமர் மோடிக்குக் கடிதம் அனுப்பி வைத்திருந்தன.

இதுதவிர நாடு கடந்த தமிழீழ அரசின் தலைவர் உருத்திரகுமாரனும் பிரதமர் மோடிக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

அதேநேரம் தமிழக முதல்வர் ஸ்டாலினும் இனப்பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்துமாறு கோரி பிரதமர் மோடிக்கு அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

நிலைமை இதுவாக இருக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் என்பது கண்ணபரமாத்மாவிடம் குசேலர் சென்றதற்கு ஒப்பானது.

ஆம், அடுத்துவரும் மாதங்களில் இலங்கையின் பொருளாதாரம் இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாகலாம் என்ற அடிப்படையில், பிரதமர் மோடியைச் சந்திக்க வேண்டிய தேவை ஜனாதிபதி ரணிலுக்கு உண்டு.

அதேநேரம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என பிரதமர் மோடி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தும்போது, அதனை ஏற்றுக் கொள்வதிலும் ரணில் விக்கிரமசிங்க பின்னடிக்கப் போவதில்லை.

அதேவேளை இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் ஜனாதிபதி ரணில் கவனம் செலுத்தப் போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

இங்குதான் ஓர் உண்மையை நாம் கூறியாக வேண்டும்.

அதாவது இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது தனித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையில் மட்டும் இல்லை.

மாறாக சிங்களப் பேரினவாதத்தில் இருக்கக்கூடிய சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ போன்றவர்கள் அயோத்தியில் நடக்கக்கூடிய பட்டாபிஷேகத்தை தடுக்கவல்ல கூனிகள்.

அதேநேரம் கூனிகளுக்கு உதவுகின்ற கைகேயிகளும் பேரினவாதத்தில் – ஆட்சிப் பீடத்தில் மலிந்திருக்கையில், தசரதர்கள் உயிர் துறப்பதும் கோசலை போன்ற அப்பாவித் தாய்மார் துன்பப்பட்டுத் துவளுவதும் அயோத்தி மக்கள் வேதனையுடன் வாழ்வதும் சாத்தியமேயன்றி மற்றும்படி அமைதிக்கும் சமாதானத்துக்கும் இடமேயில்லை.

ஆக, இனப் பிரச்சினைக்குத் தீர்வு சாத்தியப்பட வேண்டுமாயின், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மட்டுமல்ல, சிங்களக் கூனிகள், கைகேயிகளையும் இந்தியா தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது ஒருபோதும் சாத்தியப்படமாட்டாது.

# சரத் வீரசேகர ஒரு மனநோயாளி!

## இனவாதத்தை அவர் நிறுத்த வேண்டும்

### பாராளுமன்றில் செல்வம் அடைக்கலநாதன் விசனம்

(கொழும்பு)

கடற்படையில் சமையல்காரராக இருந்த சரத் வீரசேகர மனநோயாளியாகிவிட்டார். எமது மக்கள் எதற்கும் சளைத்தவர்கள் அல்ல இனவாதம் கக்குவதை சரத்வீரசேகர தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இல்லையென்றால் எமது மக்கள் கிளர்ந்தெழுவார்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வங்கித்தொழில் விசேட ஏற்பாடுகள் சட்டமூல விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர ஒரு மனநோயாளி. அவர் கடற்படையில் சமையல்காரராகத்தான் இருந்துள்ளார்.

போர்க்காலத்தில் தொடர்ந்தும் அவரை சமையலறையில் வைத்திருந்ததன் காரணமாக ஒரு மனநோயாளி போல் தற்போது செயற்படுகின்றார். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த இடமளிக்க போவதில்லை என்கிறார்

அதே போல் சமஷ்டியை வழங்க முடியாது என்கின்றார். குருந்தூர் மலையில் தமிழர் வழிபாடுகளை நடத்த முடியாது என்கின்றார்.

இவ்வாறு சொல்வதற்கு இவர் யார்? எந்த அடிப்படையில் இவர் இவ்வாறு பேசுகின்றார்? இவருக்கு ஆதரவாக இருப்போர் யார்? இவரின் கருத்துக்கள் அரசியல் சாசனத்தையும், அரசியலமைப்பையும் எதிர்ப்பவையாகவே உள்ளன.

இப்போது பார்த்தால் கனடா உயர்ஸ்தானிகரை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்கின்றார். அமெரிக்க தூதுவரை மிக மோசமாக சாடுகின்றார்.

இந்தியாவையும் அவர் சாடுகின்றார். வெளிநாடுகளின் நிதியை பெற்று சாப்பிட்டு வயிறு வளர்த்துக்கொண்டிருக்கும் சரத் வீரசேகர எங்களது நியாயமான உரிமைகள் நாங்கள் கோருகின்றபோது அதனை அவர் எந்த அடிப்படையில் எதிர்க்கின்றார்?

அதனால்தான் அவர் ஒரு மனநோயாளி என நாங்கள் கூறுகின்றோம். அவரின் கருத்துக்களை இங்கு யாரும் எதிர்க்கவில்லை.

சரத் வீரசேகர மிக மோசமாக நடந்து கொண்டுள்ளார். அவரின் கட்சித் தலைமை அவரை அடக்கி வைத்திருக்க வேண்டும். அத்துடன் அவரை இந்த சபையிலிருந்து நீக்க வேண்டும்.

எமது மக்கள் சாதாரணமானவர்கள் அல்ல. போராடியவர்கள். குண்டுகளைத் தாங்கியவர்கள். விடுதலை வேட்கை கொண்டவர்கள்.

தமிழினத்தை சீண்ட வேண்டாமென சரத் வீரசேகரவை எச்சரிக்கின்றோம். உங்களின் தடிப்பு கதைகளை உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். எமது மக்கள் தொடர்ந்தும் மௌனமாக இருக்க மாட்டார்கள் தொடர்ந்தும் சரத் வீரசேகர இனவாதம் கக்கினால் எமது மக்கள் கிளர்ந்தெழுவார்கள் என சரத் வீரசேகரவுக்கு எச்சரிக்கை விடுக்கின்றோம என்றார். (ம-7)

## பருத்தித்துறை, கரவெட்டி, வல்வெட்டித்துறையில்

# நீர் விநியோகத்தில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக கரவெட்டி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பிரதேசங்களுக்கான குடிநீர் வழங்கல் திட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

தற்போது பருத்தித்துறை நீர் வழ்ழங்கல் வடிகாலமைப்பு சபையின் நீர் பெறப்படும் நிலையங்களில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக மக்களுக்கு வழங்கும் நீரின் அளவில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் வரட்சி காரணமாக மக்களின் பாவனை வீதமும் அதிகரித்துள்ளது.

இதனால் நீர் விநியோகத்திற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் மழையினால் உருவாக்கப்படும் நிலத்தடி நீர்நிலைகளை நம்பியே நீர் விநியோகத் திட்டம் உள்ளது. நீர் நிலைகள் அற்றுப்போகுமானால் குடிநீர்விநியோகத்தில் தடங்கல் ஏற்படும் எனவே பாவனையாளர்கள் நீரினை வீண்விரயம் செய்யாது மிகவும் சிக்கனமாக குடிநீரிற்கும் சமையற்தேவைக்கும் பயன்படுத்துபடி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

23.07.2023 தொடக்கம் பருத்தித்துறை, கரவெட்டி, வல்வெட்டித்துறை ஆகிய பிரதேசங்களிற்கு தற்காலிகமாக இரு நாட்களிற்கு ஒரு தடவை நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பணவீக்கத்தில் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம், கடந்த ஜூன் மாதம், வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

தொகை மதிப்பீட்டு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில், இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த மே மாதம் 22.1 சதவீதமாக பதிவான பணவீக்கம், ஜூன் மாதத்தில், 10.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

மே மாதத்தில் 27.6 சதவீதமாக பதிவான உணவல்லா பணவீக்கம் ஜூன் மாதம் 18.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** பிரதிப்பொதுமுகாமையாளர் அலுவலகம்- மின்சார சபை, ஆளுநர் விடுதி, யாழ்.மாவட்டசெயலகம், துளசிமஹால், யு.எஸ் விடுதி, மருத்துவமனை வீதி கச்சேரி நல்லூர்வீதி, முலைவை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** குருக்கலூர் மன்னார் வீதி, நீலிய மோட்டை, பறயனாளங்குளம் (குருக்கலூர்), பெரியதம்பனை, புளியடி முறிப்பு, வலைத்தோட்டம், பெரியதம்பனை ஆகிய இடங்களிலும் **மனனார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ்தொழிற்சாலை, கூல் மென் ஐஸ்தொழிற்சாலை, பெரியகரைசல் பல் மெய்ரா ஹவுஸ், பல்மெய்ராஹவுஸ் -தலைமன்னார், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், வங்காலைப்பாடு சென்ட்லாரட்ஸ் ஐஸ் தொழிற் சாலை, பேசாலை ஐஸ்தொழிற்சாலை, Grotte of lady lourds church பேசாலை, கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல்திட்டம், கீழியங், குடியிருப்பு, குருசுபாடு கடற்படைமுகாம், படப்பாடிநீர் வழங்கல், பருத்திப்பண்ணை, பாவிநுப் பட்டான் குடியிருப்பு, பெரியகரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம்சந்தி, சிறுதோப்பு,தலைமன்னார், தலை மன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், வங்காலைப்... ஆகிய பிரதேசங்களிலு... மின்சாரம் தடைப்படு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I


22

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### மீன்குறியீட்டுடன் காளை மற்றும் மரம் உருவம் கொண்ட அநுராதபுர யுக நாணயக்குத்திகள்

இது ஒரு செவ்வக, செப்பு நாணயக் குத்தியாகும். இதன் முன்பக்கத்தில் நான்கு பெட்டி தண்டவாளத்தில் ஒரு மரத்தை நோக்கி வலது புறமாக நிற்கும் ஒரு காளையும் பின்புறத்தில் மீன் குறியீட்டுடன் ஆன உருவமும் உள்ளன.



மீன்குறியீட்டுடன் காளைமற்றும்மரம் உருவங்கொண்ட அனுராதபுர யுக நாணயக்குத்திகள்

### மீன் குறியீட்டுடன் யானை உருவம் கொண்ட பாண்டியன் வம்ச நாணயக்குத்திகள் (கி.மு 1-2)

கி.மு. 1-2 நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு சதுர வடிவ பாண்டியன் வம்சத்தின் செப்பு நாணயம். இதன் முன்பக்கம் யானை வலது புறம்



முன்பக்கம் யானைவலதுபுறம்பார்த்த படியும் பின்பக்கபம் பகட்டானமீன்சின்னமும் உள்ள பாண்டியன் வம்ச நாணயக்குத்திகள்

பார்த்த படியும் பின்பக்கம் தடித்த வளைவைச் சுட்டிக்காட்டும் பகட்டான மீன் சின்னமும் உள்ளன.

### மீன் குறியீட்டுடன் யானை மற்றும் மரம் உருவம் கொண்ட பாண்டியன் வம்ச நாணயக்குத்திகள்(கி.மு 1-2)

கிமு 1-2 நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு சதுர பல சின்னாங்கள் கொண்ட பாண்டியன் வம்சத்தின் செப்பு நாணயம் ஆகும். முன்பக்கம் இடது புறம் பார்த்த படி யானையும் கிளைகள் கொண்ட மரங்களும் இடது புறம் போர் கோடாரி என்பன உள்ளன.

பின்பக்கம் பகட்டான மீன் சின்னம் இரண்டு வரி சதுரங்களுக் குள் இணைக்கப்பட்டுள்ளது.

### அநுராதபுர யுகம் - காளை மற்றும் வட்ட சின்னம் வகை-1

இது ஒரு செவ்வக, செப்பு நாணயம் ஆகும். 8 வகையான இந்நாணயக் குத்திகளில் நிற்கும் காளையின் பல்வேறு சேர்க்கைகள் (1) வலது அல்லது (2) இடது புறம் மற்றும் புள்ளிகள் பின்புறத்தில் மற்ற சின்னங்கள் உட்பட முகப்பில் ஒரு மலர் குவளை மற்றும் (1) வட்ட (2) சதுரம் அல்லது (3) முக்கோண சட்டகம் ஒன்று முதல் நான்கு புள்ளிகள் வரை காணப்படுகின்றன. அதாவது இவை பல்வேறு அளவுகளில் இருந்த நாணயக் குத்திகளாகும். இவை அநுராதபுரத்தில் பல்வேறு தொல்பொருள் இடங்களில் காணப்பட்டன.



அநுராதபுர யுக காளை மற்றும் வட்டசின்னம்வகை-1

### அநுராதபுரம்-ருகுணு யுக கால காளை மற்றும் முக்கோணச் சின்ன நாணயங்கள்

இது ஒரு சதுர வார்ப்பு அல்லது அடிக்கப்பட்ட செப்பு நாணயம் ஆகும். ஒரு காளை இடது அல்லது வலது புறம் முகப்பில் நிற்கிறது. மற்றும் பின்புறத்தில் மையத்தில் புள்ளியுடன் ஒரு முக்கோண சட்டகம் உள்ளது. அநுராதபுரம் மற்றும் ருகுணுவில் உள்ள பல்வேறு தொல்பொருள் தளங்களில் காணப்படுகிறது.

### கி.பி 1-2 நூற்றாண்டுகளில் இலங்கையில் பாவிக்கப்பட்ட யானை மற்றும் வில் வகை சேரவம்சத்தின் சதுர செப்பு நாணயம்

கி.பி 1-2 நூற்றாண்டிலிருந்த யானை மற்றும் வில் மற்றும் அங்குசம் சின்னங்களை கொண்ட சேர வம்சத்தின் சதுர, செப்பு நாணயம் இலங்கையில் பாவிக்கப்பட்டன. முன்பக்கம், இடது புறம் முகத்தை வைத்திருக்கும் யானை. அதன் முதுகுக்கு மேல் மரக்கிளைகள். யானைக்கு முன்னும் மேலேயும் மங்கலச் சின்னங்கள். பின்பக்கம் அங்குசமும் மற்றும் வில்,அம்பு சின்னங்கள் உள்ளன.

இலங்கையில் பாவிக்கப்பட்ட சேரவம்சத்தின் சதுரசெப்புநாணயம்கி.பி 1-2



### ஹகவானு அல்லது லங்கேஸ்வரா நாணயக்குத்திகள்

சிங்களவர்களின் தங்க நாணயம் "ஹகவானு" என அறியப்பட்டதுடன் இது கி.பி 7ஆம் நூற்றாண்டிலிருந்து 8 ஆம் நூற்றாண்டு வரை இத்தீவில் சுற்றோட்டத்திலிருந்தது. இவை தங்க உலோகத்தினாலும் தங்க முலாம் பூசப்பட்டும் தயாரிக்கப் பட்டிருந்ததோடு, பெறுமதிக்கு ஏற்ப "கஹவனு", "அட் கஹவனு", "தெஅக" மற்றும் "அக" என்றவாறு பயன்படுத்தப்பட்டுள்ளன.

நாணயத்தின் முகப்பில் தாமரைத் தண்டொன்றில் நிற்கின்ற ஒரு உருவம் காணப்படுகின்றது. அந்த உருவம் "தோதிய" போன்றதொரு ஆடையை அணிந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. மேற்புறம் நோக்கியதாயுள்ள இடது கையினால் முகத்தின் பக்கம் ஒரு



பொருளைச் சாய்த்துப் பிடித்துள்ளதைக் காணலாம்.

சிலர், நாணயத்தின் முகப்புப் பகுதியில் செல்வத்திற்கு அதிபதியாகக் கருதப்படுகின்ற குபேரனின் உருவமும் மறுபக்கத்தில் சங்கு மற்றும் தாமரையின் உருவமும் குறிக்கப்பட்டுள்ளதாக கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. எவ்வாறாயினும், கஹவனுவின் முகப்பிலும் பின்புறத்திலும் உள்ள உருவங்களின் இடது கையினால் பிடித்துள்ள பொருளின்படி அந்த நாணயங்களை சில வகைகளாகப் பிரித்துக் காட்ட முடியும்.சூரியன் மற்றும் சந்திரன், கிண்ணம், தாமரை மற்றும் பிறை, பிறை மற்றும் பிறை, மல்லிகை மொட்டு மற்றும் தாமரை, உருண்டை மற்றும் வளையம், மல்லிகை மற்றும் சங்கு என்றவாறாகும்.

### அநுராதபுர யுகத்திற்குரிய வெளிநாட்டு நாணயக்குத்திகள்

பண்டைய கால இலங்கை கப்பல் துறை மத்திய நிலையமாகப் பெற்றிருந்த இடத்தைப் பற்றி அநுராதபுர இராசதானிக் காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள் சான்றுபகர்கின்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கிச் சூடு...

என்பவரே உயிரிழந்தவராவார்.

வவுனியா வடக்கு, பட்டிக்குடியிருப்பு பகுதியில் உள்ள தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த குடும்பஸ்தர் மீது இடியன் துப்பாக்கியைப் பயன்படுத்தி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## வவுனியா - மன்...

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் வவுனியா வாரிக்குட்டியூர் பகுதியைச் சேர்ந்த சயந்தன் (வயது-32) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

வவுனியாவில் இருந்து மன்னார் வீதி வழியாக குறித்த இளைஞன் மோட்டர் சைக்கிளில் சென்றபோது, மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த மின் கம்பத்துடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## வங்கித் தொழில்...

மீதான விவாதம் பாராளுமன்றத்தில் காலை 10.30 மணி முதல் மாலை 4.45 மணி வரை நடைபெற்றது.

அதன்பின் நடைபெற்ற குழுநிலை விவாதத்திற்கு அமைய, திருத்தங்கள் இணைக்கப்பட்ட பின்னர் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் நேற்று முன்தினம் பாராளுமன்றில் 42 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஐந்து...

இலங்கைக்கும் இடையில் நேற்று கைச்சாத்திடப்பட்டன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் முன்னிலையிலேயே இப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இலங்கையில் பரந்து இருக்கின்ற இயற்கை வளங்களை பயன்படுத்துவது தொடர்பாக இந்த ஒப்பந்தங்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திட்டங்களின் பொருளாதார அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு ஒப்பந்தம்.
2. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி.
3. சூரிய சக்தி திட்டத்திற்கான எரிசக்தி அனுமதி மற்றும் IPL மற்றும் lanka pay ஆகியவற்றுக்கு இடையேயான வலையமைப்பு ஒப்பந்தம்.
4. UPI விண்ணப்ப ஏற்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.
5. கால்நடை வளர்ப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

ஆகிய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## தமிழர்களின்...

உறுதி செய்யும் என்று எதிர்பார்ப்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே அதிக தொடர்பை உறுதிப்படுத்தும் பல உட்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் 200 வருடங்களை பூர்த்தி செய்துள்ள இந்திய வம்சாவளி தமிழர்களுக்கான மேம்பாட்டு உதவிப் பொதியை அறிவித்துள்ளதாகவும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் புனரமைப்பு மற்றும் நல்லிணக்கம் பற்றிய பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் அபிலாசைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையை இந்தியா கொண்டுள்ளது.

சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு மறுசீரமைப்பு செயல் முறையை முன்னெடுத்துச் செல்லும் என்றும் இந்தியா எதிர்பார்க்கிறது எனக் குறிப்பிட்டார்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக 75 கோடி இந்திய ரூபாய் மதிப்பீட்டை பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

இலங்கை - இந்திய பாதுகாப்பும் வளர்ச்சியும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன.

எனவே, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சித் தேவைகளை உணர்ந்து ஒன்றா

கச் செயற்பட வேண்டும் என்று பிரதமர் மோடி கூறியுள்ளார். (ம-7)

## 13ஆவது...

கைக்கு விசேட இடமுள்ளதாக இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இலங்கை நெருக்கடியில் உள்ள நேரத்தில் அந்த நாட்டு மக்களுடன் இந்தியா தோளோடு தோள் நிற்க வேண்டும் எனவும் இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று ஒருவருட காலத்தை பூர்த்தி செய்துள்ளமைக்காக தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர் இலங்கை மக்கள் கடந்த வருடம் பல நெருக்கடிகளை எதிர் கொண்டார்கள்.

ஆனால் நெருங்கிய நண்பர்கள் போல நாங்கள் நெருக்கடியான தருணத்தில் இலங்கை மக்களுடன்தோளோடு தோள் நின்றோம் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)

## அதி...

கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியுடனான சந்திப்பின் பின் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மறுசீரமைப்பு, அதிகாரப் பகிர்வு, அதிகார பரவலாக்கம், வடக்கு அபிவிருத்தித் திட்டத்தின் பல தரப்பட்ட விடயங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக நான் முன்வைத்த பரந்துபட்ட யோசனை குறித்து கருத்துக்களையும் நான் இந்தியப் பிரதமர் மோடியுடன் பகிர்ந்து கொண்டேன்.

இந்தப் பணிகள் குறித்துஇணக்கப்பாட்டுடன், தேசிய ஒற்றுமைக்காக பணியாற்றுமாறு நான் பாராளுமன்றத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளேன். இந்த முயற்சிகளின் போது, பிரதமர் மோடி,

பையும் ஆதரவையும்வெளிப்படுத்தியுள்ளார் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பரஸ்பர பொருளாதார உறவுகள் குறித்து சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் எதிர்கால இந்திய இலங்கை பொருளாதார பங்காளித்துவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-7)

### லக்கி 7 (Lucky 7)
திகதி 21.07.2023
சீட்டிழுப்பு இலக்கம் 008
L7 இலக்கம் 2 3
வெற்றி இலக்கினம்: கன்னி
வெற்றி இலக்கங்கள்: 0 3 9 8 5 9

### தன நிதானய
திகதி - 2023.07.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1212
A 06 14 24 75 A

### கொவிசெத
திகதி 2023.07.21
சீட்டிழுப்பு இலக்கம் 3424
ஆங்கில எழுத்து G; வெற்றி இலக்கங்கள் 15 26 63 65

### மெகா பவர்
திகதி 21/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1530
K 15 49 72 73 75

### ஹந்தஹன (HANDAHANA)
சீட்டிழுப்பு திகதி 2023.07.21
சீட்டிழுப்பு இலக்கம் 491
சிம்மம் 07 23 34 38 சிம்மம்

### மஹஜன சம்பத
திகதி 2023/07/21
சீட்டிழுப்பு இலக்கம் 5182
Z 3 7 1 7 5 0

### வலம்புரி (VALAMPURI)
சீட்டிழுப்பு வாரம் 005 — வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.07.21
வெற்றி இலக்கங்கள் 05 31 52; ஆங்கில எழுத்து H
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 18,304,250/-

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2156; வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.07.21; தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 14 41 43 73 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,543,684.40
இரண்டாம் வரம்: 02 04 09 20 V

### சனிதா
திகதி 2023.07.21; வெற்றி வாரம் 4317; வர்ணம் செம்மஞ்சள்
12 20 25 56 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,775,060.00
இரண்டாம் வரம்: 47 49 67 71 V

### சசிரி
வெற்றி வாரம் 352; சீட்டிழுப்பு திகதி 2023.07.21; பச்சை
வெற்றி இலக்கங்கள் 12 21 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,311,120/-

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 3868; வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.21; தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 27 33 34 59; மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,594,196/-
இரண்டாம் வரம்: 04 10 16 35

### கப்றுக
திகதி 21.07.2023; வெற்றி வாரம் 1332; வர்ணம் ஊதா
B 13 18 27 55 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 419,369,494.20
இரண்டாம் வரம்: 01 26 29 72 X

### அத கோடிபதி (ADA KOTIPATHI)
வெள்ளிக்கிழமை; வெற்றி வாரம் : 1982; சீட்டிழுப்பு திகதி : 2023.07.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,148,286/-
வெற்றி இலக்கங்கள் 14 34 48 67 K
இரண்டாம் வரம்: 20 36 54 60 G

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

1. isuzu lorry
விற்பனைக்கு உண்டு.
(TX model 26)
2. Mitsubishi L3100
lorry
(பட்டா வகை)
3. hyster forklift
விற்பனைக்கு
(2.5 ton)

(16373)

**077 954 4087**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிறிகாந்தராசா
சாந்ததாரணி




37ஆவது
பட்டமளிப்பு
விழாவில்
**மருத்துவத்**
**துறையில்** பட்டம்
பெற்றதையிட்டு
பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

103/1, கோவில் வீதி,
நல்லூர்

(C-6950)

சர்வலோகராசா
குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

- நீர்வேலி பகுதியில் நல்ல சூழலில் வீட்டுடன் நான்கு பரப்பு காணி விற்பனைக்குண்டு.
- நீர்வேலி கரந்தன் பகுதியில் நல்ல சூழலில் வடக்கு வாசல் வீடுகள் அமைக்கக் கூடிய மூன்று பரப்புகளாக பிரிக்கப்பட்ட காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.

(16350)

**076 796 0056**

## தவறவிடப்பட்டுள்ளது

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கொக்குவில் செல்லும் வழியில் அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், வரிக் காப்புறுதி பத்திரம் போன்றவை தவறவிடப்பட்டுள்ளது. பெயர் க.ஶ்ரீதரன் அ.இ 662590665V கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.
சன்மானம் வழங்கப்படும்.

(16363)

**077 820 1195, 075 041 3579**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டியபுலம் பாடசாலை அருகாமையில் 45 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- செம்மண், நன்னீருற்று
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதியிலிருந்து 1km தூரம்
- நிலப்பரப்பு
- ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம்.(650,000/=)
- நிலாவரை கிணற்றிலிருந்து 2Km தூரம்

(16370)

**076 057 0354**
**076 826 0354**

## Apex Travels

எம்மிடம் சகல நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களை (flight Tickets) குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**யாழ்ப்பாணம் - சென்னை**

தினசரி விமான சேவைகள் இருவழிப் பயணச் சீட்டுக்கள் (Return Tickets)
67,000/= இலிருந்து...
20Kg + 5Kg பயணப் பொதியுடன்...
முன்பதிவுகளிற்கு Apex Travels

**0777 597 598**

இல.105/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(16377)

## கணிதம், வரலாறு
### 09 - O/L, A/L வகுப்புக்கள்

மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தேசிய ரீதியாக சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் உங்கள் ஆசான். தனியார் கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்.

(16321)

**077 482 5438**

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16033)

**T.P:077 544 8503**

## தேவை

**கடைக் கணக்கு எழுதவும் கம்பியூட்டர் பில் போட கூடியவர்கள் தேவை.**

(16368)

**077 252 3155**

## WORK IN CANADA
### WORK PERMITS
### COMPUTER TECHNICIANS

COMPUTER சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்தவர்களுக்கும் COMPUTER HARDWARE, NETWORKING துறைகளில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கும் பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்

- ✓ 2 YEAR WORK PERMITS
- ✓ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- ✓ 2 வருடத்தின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

CIMS COLLEGE **0777-068-777**

(C-6948)

## WORK IN UK
### WORK PERMITS
### CIVIL ENGINEERS

CIVIL ENGINEERING சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்து CIVIL ENGINEERING துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்

- ✓ 5 YEAR WORK PERMITS
- ✓ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- ✓ 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

CIMS COLLEGE **0777-068-777**

(C-6948)

## மரண அறிவித்தல்



### கிருபானந்ததேவன் இரத்தினேஸ்வரி

முதலி கோவிலடி கரணவாய் கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருபானந்ததேவன் இரத்தினேஸ்வரி அவர்கள் 19.07.2023 அன்று அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியர் கந்தையா - லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - மீனாட்சி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கிருபானந்ததேவன் அவர்களின் அன்பு மனைவியும் முரளிதரன், மீரா(லண்டன்), ரேகா (ஆசிரியர்-கெருடாவில் இ.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், புவனேஸ்வரி, செல்லம், பரமேஸ்வரி, மகேஸ்வரி, செல்வராசா மற்றும் இராஜேஸ்வரியின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மகாதேவன், மெய்கண்டதேவன், கணேசன், முருகேசு, மயில்வாகனம், ஆறுமுகம் மற்றும் சதிர்முகதேவன்(சுவீடன்), மகாராணி, அருந்தவராஜேஸ்வரி, சிற்றம்பலம் ஆகியோரின் மைத்துனியும் வசந்தகுமார்(லண்டன்), மரியலோஜினி ஆகியோரின் மாமியாரும் ஜெயபிரவீன்(லண்டன்), அபிஷா(லண்டன்), நிகான்(லண்டன்), அக்சயன்(லண்டன்), அரோன், தினோஜ்ஜெறி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை 23.07.2023 அன்று அவரது இல்லத்தில் காலை 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலி கோவிலடி,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

(C-6947)

தகவல்:-
குடும்பத்தினர்

## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | | |
|---|---|---|
| 1 Kg சீனி | - 231/= | (max 2Kg) |
| 1 Kg றவை | - 289/= | |
| 1 Kg கோதுமை மா | - 185/= | (max 2Kg) |
| 1 Kg prima கோதுமை மா | - 199/= | |
| 1 Kg அரிசி மா | - 170/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 148/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 281/= | (max 3Kg) |
| 1 Kg மல்லி No.1 | - 450/= | |
| 10 Kg விஜிதா நாடு அரிசி | - 1820/= | |
| 400 g Nestomalt box | - 799/= | |
| Kottumee noodles | - 119/= | |

(16371)

**தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.**
**குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.**

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
**0777 8080 30**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.